INITHU INITHU
*Monthly Magazine*

# இனிது இனிது

பல்சுவை மாத இதழ்

இனிமை | சுவை 4 ... பர் 15 – ஒக்ரோபர் 15.2011

50/=




## விவாகரத்திலும் சீனா முன்னணியில்

## அறியாப்பருவக் காதல்.

## யார் இந்த கிறீஸ் பூதம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UTHAYAN IT ISLAND

# GATEWAY CENTRE

FAST TRACK TRAINING PROGRAMME


## We inspired We GATEWAY

- ICDL
- E - Citizen
- Advance ICDL Packages
- ASAP
- English for Life
- Diploma in Microsoft Office
- Diploma in Destop Publishing
- Diploma in Multimedia Graphic
- Diploma in Accounting Package
- Diploma in Hardware & Networking

CONTACT

- Luxmee Theatre Lane, Nelliyady. 021 226 2395
- 1st Floor, New Market Buildind, Chavakacheri. 021 227 0323
- 347, Kasthuriyar Road,Jaffna. 021 567 5555 / 021 222 7967

GATEWAY cfICT · GATEWAY Language Centre · GATEWAY KIDS · IPICT International Pedagogical ICT Licence · ICDL · e-Citizen · e-TYPE


இனிது இனிது இதழ் உதயன் வெளியீட்டகத்தினால் வெளியிடப்படுகிறது.
இல. 361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். TP : 021 567 7222



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிர்தல்

# சீரழிவுகளைத் தடுக்க அவசர நடவடிக்கை தேவை!

தமிழ்ப் பிரதேசங்களில் கடந்த முப்பது வருடகாலமாக போரே பிரதானமான பிரச்சினையாக இருந்தது. உயிரிழப்புக்கள். உடமைஇழப்புக்கள். கைது செய்யப்படுதல். காணாமல் போதல். இடப்பெயர்வுகள். பொருளாதாரத் தடைகள். போக்குவரத்துத் தடைகள் எனப் பல பிரச்சினைகளுக்கு தமிழ் மக்கள் முகம் கொடுத்து வந்தனர். போரினால் ஏற்பட்ட இப்பிரச்சினைகளின் தொடர்ச்சி அல்லது அவற்றினால் ஏற்பட்ட விளைவுகள் என்பன போர் முடிவடைந்துள்ள நிலையில் இன்னமும் தீர்வு காணப்படாமலேயே உள்ளன.

இவை அவ்வாறு இருக்க புதிய சிக்கல்கள் பலவும் தற்போது உருவாகி வருவதைக் காண்கின்றோம். இவற்றில் பல உள்ளிருந்தே தோற்றம் பெற்றுள்ள சிக்கல்கள்.

போர் முடிவிற்கு வந்தபின் யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற கொலை. கொள்ளைச் சம்பவங்களின் தீவிரத்தன்மை தற்போது கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ள போதும் அவை முற்றாகத் தீர்வடைந்ததாக இல்லை.

இப்போது கலாசார சீரழிவுகள் பற்றி ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள் மிகுந்த அச்சம் தருவனவாக உள்ளன. பாலியல் ரீதியான சீரழிவுகள் தமிழ் சமூகத்தை மிக வேகமாகப் பாதித்து வருகின்றமையை அவதானிக்க முடிகிறது.

பல இளம்பெண்கள் தவறான வழிமுறையில் கர்ப்பமாகியுள்ளமை குறித்த புள்ளிவிபரங்கள் வெளியாகியுள்ளன. அவர்களில் அனேகமானோர் பதினாறு வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவிகள் என்பதுதான் அதிர்ச்சியானது.

கடந்த ஐந்து மாதங்களில் இருநூறுக்கும் மேற்பட்ட பள்ளிமாணவிகள் கர்ப்பமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை பொறுப்புள்ள பெற்றோர் சமூக அக்கறையுள்ளோர் வெறும் செய்தியாக மட்டும் பார்த்து விட்டு விட இயலாது. இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதில் பெரும் பொறுப்பு பெற்றோர்களிடமே உள்ளது. தங்கள் பிள்ளைகளை சரியான முறையில் வழிநடத்தவும். அவர்கள் தவறான வழிகளில் சென்றுவிடாமல் தடுப்பதற்கான பொறுப்பும் பெற்றோர்களது கைகளிலேயே உள்ளது.

அடுத்தது ஆசிரியர்களுக்குள்ள பொறுப்பு. மாணவர்களுக்கு பாடங்களை மட்டும் சொல்லிக் கொடுப்பதோடு தங்கள் கடமை முடிந்து விட்டது என எண்ணாமல் அவர்களுக்கு ஒழுக்கம் குறித்தும் ஆசிரியர்கள் போதிக்க வேண்டும். பாடசாலைக்கு வரும் அனைத்து மாணவர்களையும் கண்காணிப்பது என்பது ஆசிரியர்களுக்கு முடியாத காரியம். பாடசாலைக்குள் மட்டுமே அவர்களை கண்காணிக்கலாம். பாடசாலையை விட்டு வெளியே சென்ற பின் அவர்களை கண்காணிக்கும் பொறுப்பு பெற்றோர்களுக்கே உரியது.

தனியார் வகுப்புகளுக்குச் செல்வதாகக் கூறிவிட்டு அவர்கள் வேறு தவறான இடங்களுக்குச் சென்று விடுவதான தகவல்கள் வெளியாகின்றன. பதின்ம வயதுப் பருவம் மிகவும் அவதானத்திற்குரிய பருவமாகும். இதில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

வறுமை காரணமாகவும் சில பிள்ளைகள் தவறான வழிகளுக்கு இட்டுச்செல்லப்படுகின்றனர். இவர்களின் பெற்றோர் வறுமை. மற்றும் கல்வியறிவு குறைந்தவர்களாக காணப்படுகின்றனர். சமூக அக்கறையுள்ள அமைப்புக்கள் இவர்களை அணுகி விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

பெற்றோரின் கண்காணிப்பின்மை. கைத்தொலைபேசி பாவனையினால் ஏற்படும் தொடர்புகள். இணையத்தில் பாலியல் தளங்களைப் பார்வையிடக்கூடியதான வசதிகள் பெருகியுள்ளமை. போரின் முடிவிற்குப் பின்னர் வடக்கில் இடம்பெற்றுவரும் சமூக மாற்றங்கள். புதியவர்களின் வருகை. தவறானவர்களின் வலைவிரிப்புகள் என்பனவும் தற்போது வடக்கில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் அதிகரித்துள்ள கலாசார சீர்கேடுகளுக்கு காரணங்களாக அமைகின்றன.

இவற்றைத் தடுத்துநிறுத்த பெற்றோர். ஆசிரியர். சமூக அமைப்புகள் இணைந்த பாரிய வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படல் வேண்டும். இன்று இது மிகவும் அவசியமும். அவசரமும் மிக்க ஒரு கடமையாகும்.

அன்புடன்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெகன்



# சுவர்க்கத்தின் குழந்தைகள்

சினிமாத் துறையில் பல யதார்த்த பூர்வமான, உள்ளத்தைச் சுண்டியிழுக்கும்' உணர்ச்சி பூர்வமான படங்களைத் தருவதில் ஈரான் பெயர்பெற்று விளங்குகிறது. பேர்சியன் மொழியில் ஈரானியப் பிரபல எழுத்தாளரும் இயங்குநருமான மஜீத் மறீடி யினால் எழுதி இயக்கப்பட்ட படம்தான் Children of heaven, 1998இல் சிங்கப்பூரிலும் 1999இல் அமெரிக்காவிலும் சிறந்த படத்திற்கான விருதையும் இத்திரைப் படம் தட்டிக் கொண்டது.

ஒரு சகோதரனும் அவனது தங்கையும் தொலைந்து போன அவளது ஒரு சோடி பாதணிகள் தொடர்பாக அவர்களது மனதைத் தொடும் அனுபவங்களை உள்ளடக்கியதாக இப்படத்தின் கதை அமைந்துள்ளது.

அண்ணனான அலி தங்கை சராவுடன் கடை வீதிக்குச் சென்று, திருத்த வேலைக்காகக் கொடுக்கப்பட்ட அவளது பாதணிகளை ஓரிடத்தில் வைத்து விட்டு உருளைக் கிழங்கு வாங்குவதற்காக பிறிதொரு கடைக்குள் சென்றிருந்த வேளையில் தற்செயலாக அங்கு வந்த குப்பை அகற்றும் தொழிலாளி ஒருவனால் அப்பாதணிகள் களவாடப்படுகின்றன. பாதணிகளைக் காணாது கடைக்குள் தேடிய அலி அங்கிருந்த மரக்கறிப் பெட்டிகளைப் புரட்டி விடவே ஆத்திரமடைந்த கடைக்காரனால் அங்கிருந்து கலைக்கப்படுகின்றனர்.



அலியின் குடும்பம் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தது. ஆகவே பாதணிகள் தொலைத்தமை குறித்து பெற்றோருக்குத் தெரியப்படுத்த அவன் பயப்படுகிறான். இதே சமயத்தில் அவர்கள் குடியிருக்கும் வீட்டு உரிமையாளன் ஐந்து மாதங்களாக வீட்டுவாடகை செலுத்தப்படாமையால் அலியின் தாயாருடன் வாக்குவாதப்படுகிறார். நிலமையையுணர்ந்த அலி தனது சகோதரியிடம் பாதணிகள் தொலைந்தமை பற்றித் தாயாரிடம் கூற வேண்டாமெனக் கெஞ்சுகிறான். அவளும் சம்மதிக்கிறாள்.

சகோதரர்கள் இருவரும் வீட்டுப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் இது குறித்து என்ன செய்யலாமென்பதை அவர்களுக்குள்

## உள்ளத்தைத் தொடும் சிறுவர்களின் கதை

# CHILDREN OF HEAVEN



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சினிமா




ஒருவருக்கொருவர் மற்றவர்களுக்குத் தெரியாமல் சைகைகள் மூலம் பரிமாறிக்கொள்ளும் காட்சி பார்ப்பவர் மனங்களை ஈர்த்துவிடும் வகையில் அமைந்துள்ளது.

சகோதரர்கள் இருவரும் ஒரு தந்திரமான உத்தியைக் கையாளுகிறார்கள். சரா அண்ணன் அலியின் பாதணிகளைக் காலையில் அணிந்து பாடசாலைக்குச் செல்வதெனவும் மதியநேரத்துடன் சரா அப்பாதணிகளைக் கழற்றி அலியிடம் மாலை நேர வகுப்பிற்குச் செல்வதற்குத் திரும்ப ஒப்படைப்பது என்பதே அதுவாகும். இவ் வசதியற்ற ஒழுங்கு நடவடிக்கையினால் அலி அடுத்தடுத்து மூன்று தடவைகள் வகுப்பிற்குக் காலதாமதாமாகச் செல்ல நேரிடுகிறது. முதல்முறை அதிபர் கவனிக்காது விடுகிறார். இரண்டாவது தடவை எச்சரிக்கிறாார். மூன்றாவது தடவையாக அலியை வகுப்பைவிட்டு வெளியேற்றித் தந்தையுடன் வரும்படி கூறுகிறார். எனினும் அவன் மீது இரக்கம் கொண்டு வகுப்பு ஆசிரியர் அதிபரை ஒருவாறு சமாளித்து இன்னோரு சந்தர்ப்பம் வழங்குவதற்கு இணங்க வைக்கிறார்.

பரீட்சையில் அலி சிறப்பாக பேறடைந்தமைக்காக ஆசிரியர் அவனுக்கு அன்பளிப்பாக வழங்கிய தங்க நிறப் பேனாவை தங்கை சராவுக்கு வழங்குகிறான். ஏழ்மையிலும் துளிர் விடும் சகோதர பாசம் அனைவரின் விழிகளையும் கசிய வைக்கிறது.

ஒரு நாள் சரா தனது நண்பியான சக மாணவி றொயாவின் பாதங்களில் தொலைந்து போன அவளது பாதணிகள் அணிந்திருப்பதைக் கண்டு கொள்கிறாள். றொயாவிற்குத் தெரியாமல் அவளது வீடுவரையிலும் சரா பின்தொடர்கிறாள். பின்பு தமையனான அலியையும் தன்னுடன் அழைத்துச் சென்று றொயாவின் வீட்டினருகே ஒளிந்திருந்து அவதானிக்கையில அவளது தந்தை ஓர் குருடன் என்பதையும் அவனே பாதணிகளை தெரியாமல் எடுத்துத்துச் சென்ற குப்பை அகற்றும் தொழிலாளி என்பதையும் புரிந்து கொண்ட சகோதரர்கள் எதுவும் பேசாது வீடு திரும்புகிறார்கள்.

றொயா நன்குபடித்து கல்வியில் சித்தியடைகிறாள் இதனால் அவளது தந்தை அவளுக்கு ஒரு சோடி புதிய பாதணிகளை வாங்கிக் கொடுக்கிறார். புதிய பாதணிகளைக் கண்ட றொயா சராவின் பழைய பாதணிகளை தூக்கியெறிந்து விடுகிறாள்.









இவ் விபரங்களைத் தனது புதிய நண்பியான றொயாவிடமிருந்து அறிந்து கொண்ட சரா மிகுந்த வேதனைக்குள்ளாகிறாள்.

இவ்வாறாக அப்பிஞ்சு உள்ளங்களில் அலைமோதும் சகோதரபாசம் பிறர் சிநேகம் மனிதநேயம் போன்ற உணர்வு அலைகளினூாடே பார்ப்பவர் மனதைக் கனியவைக்கும் கதையம்சம் கொண்டது. 'CHILDREN OF HEAVEN' படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா!

செல்வா



தொப்புள் கொடி வெட்டப்பட்டு
பிரித்த போது
கடைசி வரை
உன்னையும் என்னையும்
பிரிக்க முடியவில்லை.

எனது நாக்கில்
ஊறின சுவைகளில்
ஈரப்படும்
கடைசி எச்சில் கூட
என்றைக்குமே
கசப்பாக இருந்ததில்லை.

கூடிய வியர்வையில்
என்றைக்குமேநனைத்திருக்கும்
உனது சேலைத்தலைப்பில்
முடிந்து வைத்திருக்கும்
சில நாணயத்தாள்கள்
என்னை நாணயமாக்கியது.

எனக்கு
என்ன தேவையென்று
அறிந்து
அனைத்தையும்
நிறைவு செய்யும்
உன்னிடம்
ஒரு போதுமே
தேவையில்லாத தொன்றை
நான் கேட்கமாட்டேன்
என்று
எப்படி நம்புகின்றாயோ
அதே போல
நானும் நம்புகின்றேன்.

வீட்டில் ஒரு வேலையும்
செய்ய விடாமல்
சோம்பேறியாக்கும் என்னை
பக்கத்து வெட்ட வெளியில்
விளையாட அனுமதி கொடுத்து
உஷார் படுத்துவாய்.

உன்னிடம் நல்ல விடயங்கள்
அறிந்து கொள்ள முடிந்தும்
ஆக்கினை
கொடுப்பதாக நினைக்கிறது
இந்த மனது.

நீ சொல்லும் சொல்லை
காதில் போட்டுக் கொள்ளாது
நடந்து கொள்ளும் போதும்
மறுபடியும் மறுபடியும்
அதையே சொல்லி
நானாக
எனது காதில் போடவைக்கும்
தந்திரம்
உன்னிடம் மட்டும்தான்
இருக்கிறது.

நீ என்னுடன்
இருக்கும் போதுதான்
அம்மா தேடுவா என
வீடு வந்து சேர முடிகிறது.

என்னை படிக்க வைக்கும்
இரவில்
நான் தூங்கிவிடக்
கூடாதென்று
நீ விழித்திருப்பாய்.

என்னை சாப்பிட வைத்து
நீ பசியாறுவாய்
இந்த உடல்கள்
இதைவிட
வேறென்னத்தை
அறியும் அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் விட்டு...




'இனிது இனிது' சஞ்சிகை தொடர்ந்து வாசித்து வருகின்றேன். கடந்த இதழிலும் நல்ல விடயங்கள் பிரசுரமாகியிருந்தன. அரசியல் கட்டுரை முதல் சிறுகதைகள், கவிதைகள், மருத்துவக்கட்டுரை என அனைத்துமே ரசனைக்கும் பிரயோசனத்திற்குமானவை.

**ந.சந்திரசேகரன்**
**முறிகண்டி**

உலகத்தரம் வாய்ந்த சினிமாக்கள் பற்றிய கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள். தெய்வத்திருமகள் படத்தைப் பற்றிய குறிப்புகளுடன் அது தழுவி எடுக்கப்பட்ட ஆங்கில சினிமா பற்றியும் குறிப்பிட்டிருந்ததுடன் அந்த ஆங்கிலப்படத்தின் காட்சிகளையும் பிரசுரித்திருந்தமையால் நிச்சயம் அது ஆங்கிலப்படத்தின் தழுவல்தான் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. தற்போது தமிழில் வெளிவந்து வெற்றி பெறும் பல படங்கள் ஆங்கிலப் படங்களை அடியொட்டியனவாகவே உள்ளன.

**நிமலராஜ்**
**வல்வெட்டித்துறை.**

'இனிது இனிது' எமது பகுதிக்கு மிகத்தாமதமாகவே கிடைக்கின்றது. இங்கு வாசிப்பதற்கு வேறு சஞ்சிகைகள் இல்லை. இந்திய சஞ்சிகைகள் விலை அதிகமாக இருப்பதால் அவற்றை வாங்கி வாசிக்கப்பலருக்கு முடிவதில்லை. எமது நாட்டிலிருந்து வருகின்ற சஞ்சிகையாக 'இனிது இனிது' இருப்பதாலும், அதன் விலையும் நியாயமானதாக இருப்பதாலும், நல்ல ஆக்கங்களைக் கொண்டிருப்பதாலும் வாசகர்கள் அதனை விரும்புகின்றனர்.

**ஏ.நிஸாம்**
**நிந்தவூர்.**

தேடல் பகுதியில் இடம்பெறும் கதைகள் வரவேற்கத்தக்கவை. தொடர்ந்தும் எழுத்துலக முன்னோடிகளின் கதைகளைப் பிரசுரிக்கவும். அது வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். அத்துடன் புகழ்பெற்ற எழுத்தாளர் ஒருவரின் நாவல் ஒன்றைத் தொடராகப் பிரசுரிப்பீர்களா?

**வி.சாந்தன்**
**மானிப்பாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ந.சத்தியபாலன்



# ஈர நிலம்.



நேரம் காலை ஆறு மணிக்கு மேலாகியிருந்தது.

கனிமொழி அறைக்குள் நுழைந்த போது அவளது சின்னண்ணனாகிய வியாசன் பாயொரு புறமும் விரிப்பொரு புறமும் தலையணை ஒரு புறமுமாய் விசிறிவிட்டு வெறும் நிலத்தில் வாய்திறந்து சுக நித்திரையில் ஆழ்ந்திருந்தான்.

அதிகாலை நாலரை மணிக்கெல்லாம் அம்மா வோடு தானும் நித்திரை விட்டெழுந்திருக்கப் பழகியிருந்தாள். ஐந்தே வயதாகிய கனிமொழி,

தனது சின்னண்ணனைப் பார்க்க அவளுக்கு சிரிப்பு வந்தது.

"சின்னண்ணை.... சின்னண்ணேய்.... எழும்பன்.... பள்ளிக்கூடம் போறேல்லையே இண்டைக்கு.... கெதியா எழும்பி வெளிக்கிடன்...."

அவனை உலுப்பினாள். பெரிதாய் கொட்டாவி விட்டபடி மறு புறம் திரும்பிப் படுத்துக் கொண்டான் அவன்.

அவள் தன் முயற்சியைக் கை விடவில்லை.

சற்றேனும் மனந்தளராதவளாகத் தொடர்ந்தாள். "இப்ப ஏனடி ஆய்க்கினை தாறாய் உனக்கு என்ன வேணும்......?"

அவளது தொல்லை பொறுக்காமல் எழுந்து கொண்டவன் அவளைப் பார்த்துக் கத்தினான். "அம்மா தான் உன்னை எழுப்பி விடச் சொன்னவா.... எழும்பி வெளிக்கிட்டுக் கெதியாப் பள்ளிக்கூடம் போகட்டாம்....."

"நான் இண்டைக்குப் பள்ளிக்கூடம் போகேல்லைப் போ.... வரலாறு பாடக் கொப்பி முடிஞ்சுது கொப்பி வாங்கித் தா எண்டு கேக்க அம்மா இண்டைக்குக் காசில்லை எண்டு போட்டா கொப்பி இல்லாமல் போனா நான் துலைஞ்சன் சேரிட்ட அடி வாங்க என்னால ஏலாது....."

கனி மொழியின் முகம் வாடிப் போனது. பொதுவிலேயே பள்ளிக்குக் கள்ளம் பண்ணுகிற வழக்கம் அவனிடம் இல்லை. இன்றைக்கு ஏன் இப்படி நிற்கிறான்?

அவளுக்குப் புரியவில்லை. சிறிது நேரம் அவனையே பார்த்தபடி நின்றவள்.

"இண்டைக்கு வெள்ளிக்கிழமைஒரு நாள் தானே அம்மாவிட்டக் கடிதம் வேண்டிக் குடன் திங்கக்கிழமை கொப்பி கொண்டு வாறன் எண்டு சொல்லன்".... என்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னண்ணையெல்லே மாட்டன் எண்டு சொல்லாமல் போவன்......"

தன்னைப் பள்ளிக்கூடம் போக அவள் வற்புறுத்துகின்ற காரணம் புரிந்தது அவனுக்கு.

பதினான்கு வயதில் அவன் புரிந்தும், குழப்பியும், தெளிந்த உண்மைகள் பல

குடும்பத்தின் வறுமை. மேசன் வேலை பார்க்கும் அப்பாவின் பொறுப்பற்ற போக்கு...... குடிப்பழக் கம்..... எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு பிள்ளைகளுக்காக உத்தரிக்கிற அம்மா...., அப் பாவைப் போலவே பொறுப்பற்றவனாகிப் போய்விட்ட அண்ணன்........

அண்ணை அண்ணை என்று காலைச் சுற்றி வருகிற தங்கை.....எல்லோரையும் அவள் ஏதோ ஒரு கோணத்தில் புரிந்து வைத்திருந்தாள். தன்னை இழுத்து வைத்துக் கொண்டு நைந்த குரலில் புலம்பி "நீயாவது நாலெழுத்துப் படிச்சு மனிசனா வர மாட்டியா ராசா" என்று கெஞ்சுகிற அம்மா வின் முகத்தைப் பார்க்கப் பாவமாய் இருக்கும். அவள் யாரையும் ஏசமாட்டாள் தனக்குள்ளே குமைந்து குமைந்து மறுகுவாள். ஊருக்குள் கிடுகு பின்னவும் வளவு கூட்டவும் சமையல் செய்யவும் என அவ்வப்போது போய்ச் சம்பாதிக்க முடிகிற பணத்தில் ஒரு வாறு சமாளித்துக் கொண்டிருந்தாள் அவள். எல்லாவற்றையும் நினைக்க ஒரு நேரம் விசராய் இருக்கும் அவனுக்கும். ஆனாலும் அம்மாவின் கெஞ்சல், அந்தப்பரிதாபமான முகம் எல்லாப் பிடிவாதங்களையும் உடைத்துப் போட்டு விடும். அவளுடைய ஆசைப்படி முதல் ஐந்து பிள்ளைகளுக்குள் ஒருவனாய் ஒவ்வொரு தவணையிலும் வந்து விடுவான். எப்படியாவது இந்த முறை மூன்றாம் பிள்ளையாக என்றாலும் வந்து விட வேண்டும் என்றுதான் பாடுபடுகிறான். ஆனாலும் சில பாடங்களில் அவனால் குறிப்பிட்ட எல்லைக்கு மேல் புள்ளி பெற முடியாமற் போகிறது.

ஆனாலும் ஆசிரியர்களுடைய நல்லபிப்பிராயங்களுக்குள் தானும் உட்பட்டிருக்கும் நிலை பற்றி அவன் திருப்தி கொண்டிருந் தான்.

"என்ன பேசாமல் இருக்கிறாய் ஒமண்டு சொல்லன்...." கனி மொழி கெஞ்சினாள்.

சட்டென்று எழுந்து கொண்டவன் "நீ ஏன் இப்படி என்னைக் கலைக்கிறாய் எண்டு எனக்குத் தெரியும்.... இண்டைக்கு நான் மதிய உணவு முழுக்க சாப்பிட்டுப் போட்டுத் தான் வருவன். உனக்கு ஒண்டும் கொண்டு வரமாட்டான் போ" என்று கூறிய படியே கிணற்றடிக்குப் போனான் வியாசன். கொப்பி இல்லா விட்டால் அடி விழும்



என்று தெரிந்தாலும் பள்ளிக் கூடம் போவதை நிறுத்த முடியாது என அவனுக்குப் பட்டது. ஒரே ஒரு தங்கையாகிய கனிமொழி பசி யென்று அழுதால் அவனுக்குத் தாங்காது. கரைந்து கரைந்து அழுகின்ற அந்தச் சிறிய உருவத்தின் துக்கம் இவனை மிகவும் சங்கடப்படுத்தும். மதிய உணவில் மிச்சம் பிடித்துக் கொண்டு வந்து தங்கைக்குக் கொடுக்கும் போது அவளது முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியைப் பார்க்கப் பெரிதும் ஆறுதலாயிருக்கும்.

"விழுந்தா ரெண்டு அடிதானே..... வாங் குவம்" என்று மனசுக்குள் நினைத்தபடி குளிக்கத் தொடங்கினான். வியாசன். தன்னைச் சீண்டுவதற்காக ஏதோ சொல்லிவிட்டுக் கிணற்றடிக்கு ஓடிப் போய் குளிக்கிற அண்ணனை அவளுக்குப் புரியும் அவனது ஆசை அண்ணா அல்லவா அவன்.

குளித்து விட்டு உள்ளே வந்தவன் கொடியில் எடுத்துப் போடப்பட்டிருந்த சீருடைகளை எடுத்தான்.

"தன்ர சட்டையளுக்கும் போடாமல் நேற்றுப் பின்னேரமேஇருக்கிற சவுக்காரத்தை உன்ர வெள்ளைச் சட்டைக்குப் போட்டுத் தோய்ச்சது பிள்ளை"

அம்மா சொன்னதைக் காதில் வாங்கிக் கொண்டு சின்னச் சிரிப்போடு கனிமொழி எங்கேயென்று தேடினான் வியாசன்.

மேசையடியில் கிடந்த அவனது சப்பாத்துக்களைக் குனிந்து எடுத்து துணியொன்றால் துடைத்துக் கொண்டிருந்தாள். கனிமொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ விக்கிர்தன்



# யார் இந்த கிறீஸ்

முதலில் மலையகத்தில் தோன்றிய கிறீஸ் பூதம் யாழ்ப்பாணம் வரை வந்து அச்சுறுத்தி இருக்கிறது. கடந்த ஒகஸ்ட் மாத ஆரம்பத்தில் தோட்டப்புற அப்பாவித் தொழிலாளர்களை அச்சுறுத்திய கிறீஸ் பூதத்தால் லயன் அறைகளிலிருந்து அவர்கள் வெளியேறி ஓடும் நிலை ஏற்பட்டது. கிறீஸ் பூதங்கள் மலையகத்தின் பதுளை, நுவ ரெலியா, கொட்டகல, மாத்தளை, கஹ வத்தை முதலான பகுதிகளில் அட்டகாசம் செய்தன. பின்னர் கிழக்கு மாகாணத்தில் கால் பதித்தன. திருகோணமலை, மட்டக்களப்பு பின்னர், வடக்கில் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என எல்லா இடங்களிலும் கிறீஸ்பூதம் அதன் கிளைகளையும் பரப்பி ஆங்காங்கே மக்களை அச்சுறுத்துகின்றது.

போர் அச்சுறுத்தலுக்குப் பின்னர் இப்போது கிறீஸ்பூத அச்சமே மக்களைத் தொற்றிக்கொண்டுள்ளது. 83ஆம் ஆண்டு ஏற்பட்ட இனவன்முறைகளின் போது மலையகத்தில் ஏற்பட்ட பதற்ற நிலமைக்குப் பின்னர் இப்போது இந்த மர்மமனிதர்களின் செயற்பாடுகளால் மக்கள் பதற்றமடைந்துள்ளார்கள் என அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ராதாகிருஸ்ணன் கூறியுள்ளார்.

அப்புத்தளை கொட்டகல தோட்டத்தில் இரவு வேளையில் மர்மநபர்கள் இருவர் நடமாடியதையடுத்து அவர்கள் மீது பொதுமக்கள் தாக்குதல்களை நடத்தினர். இதில் அந்த இருவரும் உயிரிழந்தனர். தொடர்ந்து ஏற்பட்ட பதற்றம், அச்சம் காரணமாக தோட்டப்புற மக்கள் தங்கள் குடியிருப்புக்களிலிருந்து வெளியேறி வேறு இடங்களில் தஞ்சமடைய நேர்ந்தது. வேலைக்குச் செல்லும் பெண்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர். வீடுகளில் உள்ள பெண்களுக்குப் பாதுகாப்பாக ஆண்களும் வேலைக்குச் செல்லவில்லை. தோட்டப்புற மக்களின் வருமானம் இதனால் பாதிக்கப்பட்டது. உயர்தரப் பரீட்சைக்குச் தோற்றும் மாணவர்கள் அச்சம் காரணமாக செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.

மலையகத்திற்குப் பிறகு திருகோணமலையில் கந்தளாய்ப் பகுதியில் மர்மமனிதன் அச்சுறுத்தல் ஏற்பட்டது. தொடர்ந்து பொத்துவிலில். அங்கு பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது. இதில் முஸ்லிம் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார். அன்றிரவு ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. சம்மாந்துறையில் குளித்துக்கொண்டிருந்த பெண்ணொருவரோடு சேட்டையிலீடுபட்ட மர்மநபர்கள் இருவரை பொதுமக்கள் விரட்டிச் சென்ற போது பொலிஸ் நிலையத்திற்குள் சென்று மறைந்துள்ளனர். மட்டக்களப்பு நாவற்குடாவில் இளம்பெண்ணொருவர் மர்மநபரொருவரால் கத்தியால் கீறப்பட்டு காயமடைந்துள்ளார். மூதூரில் பெண்ணொருவரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டை புரிந்த இருவரை பொதுமக்கள் விரட்டிச்சென்ற போது அவர்கள் மூதூர் ஹபீப் நகரிலுள்ள கடற்படை முகாமுக்குள் சென்று மறைந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து கடற்படையினருக்கும் பொதுமக்களுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டன. மட்டக்களப்பு வெல்லாவெளிப் பகுதியில் அதிகாலை ஒரு மணியளவில் வீடொன்றின் கூரையைப் பிரித்துக் கொண்டு உள்ளே நுழைய முற்பட்ட சிலரை பொதுமக்கள் பிடிக்க முயன்ற போது அவர்கள் பொலிஸ் சாவடிப் பக்கமாக ஓடித் தப்பியுள்ளனர்.

கிண்ணியா மத்திய பள்ளிவாசலுக்குள் நுழைந்த பத்து மர்மநபர்கள் தொழுகையிலீடுபட்டுக் கொண்டிருந்த முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பியோடியுள்ளனர். இதில் ஏழு பொதுமக்கள் காயமடைந்தனர். இதனை அமைச்சர் ரிசாத் பதியுதீன் கூட வன்மையாகக்

# பூதம்?



கண்டித்துள்ளார். இதற்கு இருதினங்களுக்கு முன்னர் கிண்ணியாவில் இரவு பத்து மணியளவில் இருவர் பெண்ணொருவரைத் தாக்கிவிட்டு தப்பியோடி கிண்ணியா கடற்படை முகாமுக்குள் தஞ்சமடைந்துள்ளனர்.

இவ்வாறான சில சம்பவங்களின் போது இந்த மர்மமனிதர்களைத் தேடிச்சென்ற துரத்திச்சென்ற அல்லது, அச்சம் காரணமாக பயந்து ஓடிய மக்கள் சிலர் உயிரிழந்த சம்பவங்களும், காயமடைந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. ஏறாவூரில் மர்ம நபர்களைக் கண்டு பயந்தோடிய எட்டுப் பிள்ளைகளின் தாயான 42 வயது பெண்ணொருவர் ரயிலில் மோதி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. 24.08.2011 அன்று வடமராட்சிப் பகுதியில் 75 வயது பெண்ணொருவர் அதிர்ச்சியில் உயிரிழந்துள்ளார். இரவு இரண்டு மணியளவில் அவரது வீட்டின் முன்பாக இருந்த மரத்திலிருந்து மூவர் குதித்ததைக் கண்டதும் ஏற்பட்ட அதிர்ச்சியினால் அவருக்கு இந்நிலை ஏற்பட்டது.

யாழ்.நாவாந்துறைப் பகுதியிலும், வடமராட்சிப்பகுதியிலும் மர்மமனிதர்களின் செயற்பாடுகள் பொதுமக்களால் அவதானிக்கப்பட்டுள்ளன.

22.08.2011 இரவு நாவாந்துறையில் இடம்பெற்ற சம்பவத்தின் போது பொதுமக்களுக்கும் படையினருக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்றன. இரவில் வீடுகளுக்குள் நுழைந்த படையினர் அங்கிருந்த அனைவரையும் தாக்கியுள்ளனர். தங்களை நிர்வாணமாக்கி விட்டு தடிகளாலும் பொல்லுகளாலும் படையினர் தாக்கியதாகவும், சப்பாத்துக்களைக் கழற்றித் தாக்கியதாகவும் காயப்பட்ட சிலர் தெரிவித்தனர். பெண்கள் சிலரும் தாக்குதலுக்குள்ளானதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். 102 பொதுமக்கள் படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 18பேர் கடுமையான தாக்குதல்களுக்குள்ளாகினர். இதனால் பலரது எலும்புகள் முறிவடைந்துள்ளதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. யாழ்ப்பாணத்தில் மர்மமனிதன் பிரச்சினையால் ஏற்பட்ட மிக மோசமான சம்பவமாக இதனைப் பார்க்கலாம்.

இப்படிப் பல சம்பவங்கள் கிறீஸ்பூதம் மர்ம மனிதர்கள் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றவர்களால் இடம்பெற்றுள்ளன. இந்நிலை இன்னமும் முற்றுப்பெற்றதாக இல்லை. தொடர்ந்தும் மர்ம மனிதர்கள் பற்றிய அச்சம் யாழ்ப்பாணம் முழுவதும் பரவிவருகின்றது.

கிறீஸ்மனிதன் வருகின்றானோ இல்லையோ இரவில் இப்போது மக்களுக்கு நித்திரை வருவதில்லை. இரவு வேளைகளில் யாருடைய நடமாட்டம் உணரப்பட்டாலோ, சிறிய சத்தம் கேட்டாலோ மக்கள் பயப்பீதியடைகின்றனர். இரவில் உலவும் சாதாரண மனிதர்கள், பிச்சைக்காரர், புத்திசுவாதீனமற்றவர்கள், கோழித்திருடர்கள் பெண்களோடு சேட்டைகளிலீடுபடும் விசமிகள் எல்லோருமே மக்களின் கண்களுக்கு இப்போது கிறீஸ்பூதங்களாகவே தோற்றம் தருகின்றனர்.

## யார் இந்த மர்மமனிதர்கள்?

திட்டமிட்டு செயற்படும் இந்த மர்மமனிதர்கள் படையினர் அல்லது, படையினரோடு சேர்ந்து இயங்குபவர்கள் என்கிற சந்தேகம் மக்கள் மத்தியில் உள்ளது. ஏனெனில், இவர்களை மக்கள் துரத்திச் செல்கின்ற போது படைமுகாம்களில் புகுந்துள்ளார்கள். பொலிஸ் நிலையங்களில் பொதுமக்களால் ஒப்படைக்கப்பட்ட மர்மநபர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். மர்மமனிதர்களைத் தாக்கிய பொதுமக்கள் மீது படையினர் தாக்கியுள்ளனர். அத்துடன் இவ்வாறான மர்மமனிதர்கள் பிடிபடும் போது அவர்களைப் பொதுமக்கள் தாக்கக்கூடாது எனவும், அவர்களைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் படையினரும் பொலிஸாரும் பொதுமக்களை எச்சரித்து வருகின்றனர். அதுமட்டுமல்லாது இந்த நபர்களைப் பொதுமக்கள் துரத்திச்செல்லும் போது அவர்கள் மின்னல் வேகத்தில் ஓடிச்சென்று மறைகின்றமையால் அவர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் எனவும் மக்கள் நம்புகின்றனர்.

பிடிபட்டு படையினரிடமோ பொலிஸாரிடமோ ஒப்படைக்கப்படுகின்றவர்களை விசாரணை செய்து அவர்கள் யார் என்பது குறித்து மக்களுக்கு பாதுகாப்புத்தரப்பினர் சரியான விளக்கங்களை வழங்குவதில்லை. இதுவும் மக்களின் சந்தேகங்களுக்கு ஒரு காரணம்.

நாவாந்துறையில் நடைபெற்ற சம்பவங்களுடன் வடக்கிலிருந்து படையினர் வெளியேற வேண்டும் எனத் தெரிவித்து வரும் அரசியல் சக்திக்கு தொடர்பு உள்ளதாக அரசதரப்பினரும், படைத்தரப்பினரும் குற்றம் சாட்டினர். தமிழ் தேசியக் கூட்டமைப்பினை மனதில் வைத்தே இக்கருத்துக் கூறப்பட்டது. அப்படியானால், மலையகத்திலும், கிழக்கிலும் நடைபெற்ற சம்பவங்களின் நோக்கம், பின்னணி என்ன என மக்கள் கேட்கின்றனர்.

இதே வேளை. இந்த கிறீஸ்பூதம் தொடர்பாக அரசாங்கத்தையும் படையினரையும் தொடர்பு படுத்தி பல கருத்துக்களை கூட்டமைப்பிலும் பார்க்க சிங்கள எதிர்க்கட்சிகளே அதிகம் வெளியிட்டு வருகின்றன. என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உண்மையில் இந்த மர்மமனிதர்கள் எனப்படுவோர் எல்லோரும் கிறிஸை உடலில் பூசிக்கொண்டு வருகின்றார்களா என்றால் அவ்வாறு இல்லை. ஒரிருவர் அவ்வாறு வந்திருக்கலாம். ஆனால், மர்மமனிதர்கள் அனைவரும் அவ்வாறு வந்ததாகத் தகவல் இல்லை. இவர்கள் பெண்களைக் காயப்படுத்தியிருக்கின்றார்கள், தாக்கியிருக்கின்றார்கள். பாலியல் வல்லுறவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தகவல்கள் இல்லை.




இவர்கள் காயப்படுத்திய பெண்கள் அனைவரும் தமிழ் முஸ்லிம் இனத்தவர்களே. சிங்களப் பெண்கள் எவரும் காயப்படுத்தப்படவில்லை. அவர்களின் வீடுகளுக்குள் மர்மமனிதர்கள் எவரும் புகவும் இல்லை. இவையும் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் சந்தேகங்களை எற்படுத்தியுள்ளன.


## மர்மமனிதர் அல்லது கிறீஸ்பூதம் தொடர்பாக சொல்லப்படும் கதைகள்.

புதையலில் இருக்கும் துட்டகெமுனுவின் வாளை எடுப்பதற்காகவும், பன்றி இறைச்சி சாப்பிடாதவர்களின் இரத்தத்தைக் கொண்டு ஜனாதிபதிக்கு பூஜை செய்வதற்காகவும் சிலரை கிறீஸ் பூதங்களாக அரசாங்கம் உலவ விட்டுள்ளதாக கதைகள் பரவின. ஆனால், இதனை பாதுகாப்புச் செயலாளர் முற்றாக மறுத்து, அவை கட்டுக்கதைகள் என தெரிவித்துள்ளார். கிறீஸ் மனிதர்களோடு படையினருக்கோ அரசாங்கத்திற்கோ எவ்வித தொடர்பும் இல்லை எனவும் அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார். அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்து நீடிப்பதற்காகவும் தமிழர் வாழும் பகுதிகளில் புதிய படைமுகாம்களை அமைப்பதற்காகவும் இது மேற்கொள்ளப்படுகின்றது எனக் கூறப்படுகின்றதையும் அவர் மறுத்துள்ளார். (அவரசர காலச்சட்டம் நீக்கப்பட்டுவிட்டதாக 25.08.2011 அன்று ஜனாதிபதி அறிவித்துள்ளமைஇங்கு குறிப்பிடத்தக்கது)

கிறிஸ்பூதம் குறித்த மக்களின் அச்சத்தையும், சந்தேகங்களையும் போக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நாட்டில் மர்மமனிதர்களாக நடமாடிய 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் மாஅதிபர் தெரிவித்துள்ளார். அவ்வாறாயின் அவர்களை உரிய முறையில் விசாரணை செய்து அவர்கள் குறித்த விபரங்ளையும், பின்னணிகளையும் பொதுமக்களுக்கு பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களும்,இது குறித்து சொல்லப்பட்டு வரும் கதைகளும் மேலும் காட்டுத்தீ போல் நாடு முழுவதும் பரவவே செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக இணைவும் கூடி வாழ்தலும்

## (Social cohesion & living together)




எமது சமூகம் பல நெருக்கீடுகளுக்கு முகம் கொடுத்த போதெல்லாம் மக்களுக்கிடையே இருந்த சமூக இணைவே அவர்களைப் பாதுகாத்து வந்துள்ளது. மனநல மருத்துவர்கள் அல்லாது உளவளத்துணையாளர்களே அவர்ளைப் பாதுகாத்ததாக எண்ணுவோமாயின் அது மிகவும் அபத்தமானது.

அண்மையில் நான் கடமைபுரியும் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த , வன்னிப் போர அவலத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சிலரைப் பார்வையிட நேரிட்டது தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த தாய் தன் மகளைப் பராமரிக்க அனுமதிக்கப்பட்டிருந்தாள். மகள் கணுக்கால் பகுதிக்கு கீழ் முறிவுற்ற நிலையில் திருமலை வைத்திய சாலையில் இருந்து அனுப்பப்பட்டிருந்தாள். அந்தத் தாய் தனது கணவனைப் பறி கொடுத்த துயரிலிருந்தாள். அந்த கட்டிலிற்கு அருகே இன்னுமோரு பெண்மணி கையெலும்பு முறிந்து படுத்த படுக்கையாக இருந்தாள். அந்தப் பெண்மணிக்கு உதவியாக ஒருவரும் இல்லாத நிலையில் தன் மகளுடன் வந்திருந்த தாயே உதவியாக இருந்ததைக் காண முடிந்தது இச்சம்பவம் சமூக இணைவும் ஆரோக்கியமானது என்பதைப் புரிந்து கொள்வதற்குத் தகுந்த உதாரணமாகும்.இச் சம்பவம் சமூக ஆதரவு என்ற நிலையே பல நெருக்கீடுகளிலிருந்து மனிதன் தன்னை மீட்டுக் கொள்ள உதவுவதாகப் பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஊரில் ஒரு மரணச் சடங்கு நடந்திருந்தால் சுமார் ஒரு மாத காலத்துக்கு அந்த வீட்டில் உள்ளவர்கள் சமைக்க மாட்டார்கள் சுற்றமும் அயலவர்களும் தான் அவர்களுக்கான உணவைத் தயாரித்துப் பரிமாறுவார்கள். உணவுடன் அவர்களது ஆதரவும் கிடைக்கப் பெறுவதனால் இழவு வீட்டிலுள்ளவர்கள் தங்களது இழவிரக்கச் செயற் பாட்டினைச் சுலபமாகக் கடந்து செல்வதை நாம் கண்டிருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயருறும் மனிதனை ஆசுவாசப்படுத்தி ஆதரவளித்து அவனைப் பழைய நிலைக்கு கொண்டுவருவதில் சமூகமும் அதன் சடங்குகளும் செய்தளவிற்கு வேறு எதுவுமேசெய்யவில்லை என்பதே உண்மை. அந்தச் சமூக இணைவிற்கு இன்றைய நவீன தொழில் நுட்பங்களும் தனிமனிதனை முதன் மைப் படுத்துகின்றது. வாழ்க்கை முறைமைகளும் வேட்டு வைத்துள்ளன. வெறுமனே இணையத் தளங்களையும் மின்னஞ்சல்களையும் பார்வையிட்டவாறும் தொலைக்காட்சியினை ரசித்தவாறும் உலகமே ஒரு கிராமமாகி விட்டதாக சத்தமிட்டுக் கொண்டு தனிமைச்சிறையில் அடைபட்டுக் கிடக்கின்றான் மனிதன். அவனது பாதுகாப்புக் கவசமான சமூக ஆதரவை மெல்ல இழந்து போவதால் அவன் மன நெருக்குதல் களுக்கும் மனச்சோர்விற்கும் ஆளாகின்றான். இன்று புது விதமான ஒரு 'தனிமைநோய்' ஏற்படு கிறது என்று வியாக்கியானப்படுத்தி ஒரு கண்டு பிடிப்பில் இறங்கியிருக்கிறது மருத்துவ உலகம்.

சமூகத்துடன் இணைவதையும் மத கலாசார நிகழ்வுகளில் கலந்து கொள்வதையும் நவீன யுகத்திற்கு ஒவ்வாத ஒன்றாகப் பலர் கருதுவதும் இப்பொழுது அதிகரித்துச் செல்கின்றது. ஒரு உணவு விடுதியில் தனியாக அமர்ந்து கொழுப்பு நிறைந்த உணவுப் பொருட்களை உண்டு கொண்டு தொலைக்காட்சி போன்ற நிகழ்ச்சிகளை ரசிப்பதே இப்போதையவர்களின் நவீனம். இதனால் இழக்கப்படுவது அவர்களது ஆரோக்கியம் மட்டுமல்ல. மகிழ்ச்சியும் கூடத்தான் என்பது கண்கூடு.



இன்றைய ஆய்வுகள் ஆரோக்கியமான சமூக உறவுகளைக் கொண்டவர்களில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்துக் காணப்படுவதாகக் கூறுகின்றன. ஆரோக்கியமான உறவுகளை ஏற்படுத்துவதனால் மனிதன் தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறான். பாது காப்பு உணர்வு, உணர்ச்சி நிலை, பாதுகாப்பு, கவனிப்பு, முன்னுரிமை போன்ற பல உணர்வுகளை உள் வாங்குகின்றான். அதுவே அவனது மகிழ்ச்சிக்கு வித்திடுகிறது. எமது உயிரியல் தேவையும் அதனைச் சார்ந்ததாகவே இருக்கிறது.

அமெரிக்காவில் சுமார் 90000 கட்டிளமைப் பருவத்தினரிடையே செய்யப்பட்ட மிகப் பெரிய ஆய்வில் மாணவர்களில் மகிழ்ச்சியை பாதிக்கின்ற பல காரணிகள் பற்றி (நூற்றுக்கு மேற்பட்ட) ஆராயப்பட்டது. அதில் முக்கியமான காரணிகள் அந்த மாணவர்கள் வீட்டுடன் பாடசாலையுடன் எவ்வாறு இணைக்கப் பட்டுள்ளனர் என்பதிலேயே பிரதானமாகத் தங்கியுள்ளது எனக் கோடிட்டுக் காட்டியது. குறைந்தளவு இணைப்பைக் காட்டியவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த இணைப்பு முதலில் வீட்டிலும் பின்னர் பாடசாலையிலும் இதனைத் தொடர்ந்து சமூகத்துடன் இணைவுடன் கூடி வாழ்வதற்குரிய திறனேயாகும்.

கூடி வாழ்தல் என்கின்ற மனநிலை முதலில் குடும்பத்தில் கூடி வாழும் நிலையை அடையாமல் சமூகத்தில் அது சாத்தியமாகாது. குடும்பம் ஒரு அலகாகத் தொழிற்படுகின்ற நிலைமைமிக முக்கியமானது. பல குடும்பங்களில் அங்கத்தினர் பௌதிகரீதியாகப் பிரியாமல் ஒன்றாக வாழுவதை அவதானிக்கலாம். ஆனால் அவர்கள் உளவியல் ரீதியாகவும் தொழிற்பாட்டு ரீதியாகவும் ஒரே கூறாக இருப்பதில்லை குடும்பத்தில் முரண்பாடுகள் ஏற்படாது என்று நான் வாதாட வில்லை முரண்படுகின்றமையும் ஒரு விதத்தில் இணைவினைக் காட்டுகின்ற வெளிப்பாடே யாகும். முரண்பாடும் இல்லை. அதேவேளை வேறு எந்தத் தொடர்பாடலும் இல்லை என்னும் நிலை ஆரோக்கியமானது அல்ல. முரண்படுகின்ற போதும் ஒரே கூறாகத் தொழிற்படுகின்றமை இங்கு முக்கியமானது. அதனால் தான் விழாக்களும் நிகழ்ச்சிகளும் இந்த இணைவினை மேலும் வலியுறுத்தி மேம் படுத்துகின்றன.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் கடற்கரைக்குச் செல்வதற்கு அச்சமுற்று ஒதுங்கியிருந்த காலத்தில் திருமலை காளியம்மன் கோவில் விழாவில் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கடலில் கூடியிருந்ததைக் காண முடிந்தது. கடல் மீது இருந்த அச்சத்தை அகற்றுவதற்குச் சிகிச்சைகளை வழங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு அந்தச் சம்பவம் திகிலூட்டியது. ஆனால் அந்தச் சிகிச்சையாளர்களையும் மக்கள் கடலுக்குக் கூட்டிக் கொண்டு சென்றார்கள் என்பதே உண்மை. இவ்வாறான மகத்துவங்களை நாம் புறந்தள்ளி விட்டு தனிப்பட்ட சிகிச்சைகளை மட்டும் சர்வரோக நிவாரணியாகக் காட்ட முற்படக் கூடாது. எமது சமூகத்தினுள் இயல்பாகவே பல உளச்சிகிச்சைக்குரிய கூறுகள் இருப்பதை நாம் மறுதலிக்க முடியுமா....?

அனர்த்தங்களினால் சமூக இணைவுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் கூடி வாழ்தலுக்கும் பிரதான தடையாக இருப்பது இன்றைய இயந்திரத்தனமான வாழ்க்கையின் வேகம் இன்றைய வாழ்க்கை மிகவும் வேகமாகவும் பரபரப்பாகவும் மாற்றப் பட்டு வருகின்றது. வருமானத்தைப் பெருக்கு வதன் அவசியத்தை வலியுறுத்தி அதனையே வாழ் வின் மகிழ்ச்சியாகவும் சாதனையாகவும் காட்ட முற்படுகின்றமை மிக முக்கியமான தடைக் கல்லாக அமைகின்றது. எனவே இந்தப் பொறி களினுள் சிக்காமல் வாழ்க்கையை நகர்த்து வோமானால் சமூக இணைவு சாத்தியமானதே.

நன்றாக உழைத்தால் தானே சந்தோசமாக இருக்கலாம் எனப் பலர் குறிப்பிடுகின்றார்கள். இங்கு உழைப்பு என்பது அதிகமான பொருளீட் டல் தானே. எனினும் அவ்வாறு எல்லாவற்றை யும் பலி கொடுத்து ஈட்டப்படுகின்ற பணம் மீள வும் சந்தோஷத்திற்கென முதலிடப்படுகிறது. ஆனால் அங்கு உண்மையான மகிழ்ச்சியைக் காணமுடியாமல் எல்லோரும் தவிக்கின்றனர். ஒருவரது வருமானத்திற்கும் மகிழ்ச்சிக்கும் நேரடியான தொடர்பு இல்லை என்பதைச் சுட் டிக் காட்டுகின்றன. எனவே எமது சகல சுகங்க ளையும் பலி கொடுத்து அதிகமாக பொருள் ஈட் டிப் பின் அதனை முழுமையற்ற சந்தோசத்தைப் பெறுவதற்காக முதலிடுவதை விடுத்து மகிழ்ச் சியான வாழ்க்கையைச் சரியான திட்டமிடலி னூடாக மேற்கொள்வது மிகவும் மேலானது. பஞ் சம் தலை தூக்குகின்ற காலத்தில் சேமித்து வைத்த வற்றை உபயோகிப்பதைப் போன்றதல்லவே மகிழ்ச்சி. அது நீண்டு நிலைத்துச் செல்கின்ற உணர்வொன்றாகும்.

குடும்பத்துடன் உரிய நேரத்தைச் செலவழிக் காமல், சமூகத்துடன் சிறிதளவு பொழுதினை யேனும் கழிக்காமல் பொருளீட்டலை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்பவர்களில் எத்தனை பேர் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள்? இதற்கு விடை காணப் பெரிய ஆய்வுகள் தேவையில்லை.

நான் பொருள் ஈட்டலை முற்றாக நிறுத்தி விட்டு ஞானிகள் போல வாழ வேண்டும் என்று கூற வரவில்லை. பொருளீட்டலின் தேவை சரி யான அளவில் உணரப்பட்டு அதே நேரத்தில் மனித தேவையின் மற்றைய காரணிகளையும் சரி யாகக் கணிப்பிட்டுச் செயல்படுவோமானால் இது ஒரு பெரும் பிரச்சினையாக அமையாதல் லவா?

மனநலமருத்துவர்
எஸ். சிவதாஸ்
'மகிழ்வுடன்'

# சர்தார்ஜி

## பில்கேட்சுக்கு கடிதம் எழுதினார்




என் வீட்டு உபயோகத்துக்காக ஒரு கம்ப்யூட் டர் வாங்கினேன். அதில் சில பிரச்சினைகள் இருப்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

1. அதில் ஸ்டார்ட் பட்டன் இருக்கிறது. ஆனால் ஸ்டொப் பட்டன் இல்லை. சரிபார்க் கவும்.

2. உங்கள் கம்ப்யூட்டரில் ரீசைக்கிள் என இருக்கிறது. என்னிடம் ஏற்கனவே ஒரு சைக் கிள் இருப்பதால் ரீஸ்கூட்டர் கிடைக் குமா?

3. எனக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும். மைக்ரோசொப்ட் வேர்டுக்குப் பதிலாக, மைக்ரோ சொப்ட் சென்டென்ஸ் படிக்க வழி உண்டா?

4. கம்ப்யூட்டரில் மைக்ரோசொப்ட் ஒபீஸ் இருக்கிறது. நான் வீட்டில் உபயோகிப்பதால், மைக்ரோசொப்ட் ஹோம் கிடைக்குமா?

கடைசியாக ஒரு சொந்தக் கேள்வி.

உங்கள் பெயரில் கேட்ஸ் இருக்கிறது. ஆனால் நீங்களோ வின்டோஸ் விற்கிறீர்கள். ஏன் இந்த முரண்பாடு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காயம் போட்ட மாலை!

தமிழர்களில் பலர் சிங்கள மொழியில் சரளமாக உரையாடும் திறமை உடையவர்களாக இருப்பதைக் காண்கின்றோம். சில சமயங்களில் அவர்களின் உரையாடலை அவதானித்து விட்டு நீங்கள் சிங்களவரா என சிங்களவர்களே கேட்பதும் உண்டு. சில வருடங்களுக்கு முன்னர் தமிழ் ஆசிரியர் ஒருவர், அவர் இடதுசாரி கட்சி ஒன்றின் உறுப்பினராக இருந்தவர், சாதாரண சிங்களவர்களுக்குத் தெரியாத அரசியல் பதங்களைப் பயன்படுத்தி சிங்கள மொழியில் உரையாடக்கூடியவர். ஒரு தடவை இராணுவ அதிகாரி ஒருவரிடம் அவர் உரையாடிக்கொண்டிருந்த போது தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை மிக




நுட்பமாக விளக்கிக் கொண்டிருந்தார். தமிழ் மக்கள் சார்பாக அவர் முன்வைத்த கருத்துக்களை அந்த இராணுவ அதிகாரி பெரிதும் ஏற்றுக் கொள்ளா விட்டாலும், அவரது மொழியாற்றலை வியந்து பாராட்டினார். அந்தத் தமிழர் சிங்களத்தில் உரையாடிய போது பயன்படுத்திய பதங்கள் தமக்கே தெரியாது என அவர் கூறியதோடு தனது சொந்த மொழியான சிங்களம் தமக்கே மறந்து விடும் போலுள்ளது எனவும் சிரித்துக்கொண்டே கூறினார்.

தமிழ் மொழியில் உரையாடக்கூடிய சிங்களவர்கள் குறிப்பிட்ட சிலரே உள்ள போதும் அவர்கள் பேசும் போது சிங்களவர்கள் தமிழ் பேசுகிறார்கள் என்பதை சுலபமாக கண்டுபிடித்தும் விடலாம்.

இப்போது இலங்கையின் ஜனாதிபதி தமிழ் மக்கள் மத்தியிலே தமிழில் உரையாற்றுவதில் மிக ஆர்வமாக இருக்கின்றார். சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் போன்றவர்கள் கூட வடக்கிற்கு வந்து பொதுமக்களுடன் உரையாடும் போது தங்களுக்கு தமிழில் உரையாட முடியவில்லையே என ஆதங்கப்படுவதும் உண்டு.

பல ஆண்டுகளுக்கு முன்னர். அதாவது 1974ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் இலங்கையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி புரிந்தது. பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கா இருந்தார். அக்காலப்பகுதியில் வெளிநாடுகளிலிருந்து விவசாய உற்பத்திப் பொருட்கள் இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டு உள்நாட்டு விவசாயிகள் பெரும் பயனைப் பெற்றார்கள். குறிப்பாக, வடபகுதியில் மிளகாய், வெங்காயச்



செய்கையாளர்கள் பெரும் பணக்காரர்களாக அப்போது இருந்தனர். அச்சமயத்தில் அப்போது விவசாய அமைச்சராக இருந்தவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். யாழ்ப்பாண விவசாயிகள் அவரை ஆர்வத்துடன் வரவேற்றனர். மாலைகள் அணிவித்து மரியாதை செலுத்தினர். யாழ்ப்பாணத்தில் விவசாயிகள் மத்தியில் கூட்டம் ஒன்றில் அமைச்சர் ஒரளவிற்கு தமிழில் உரையாற்றிக் கொண்டிருந்தார். அப்போது வெங்காயச் செய்கையாளர் ஒருவர் தனது தோட்டத் தில் விளைந்த வெங்காயத்தினால் அழகான மாலை ஒன்றை செய்து கொண்டு வந்து மேடையில் உரையாற்றிக் கொண்டிருந்த அமைச்சரின் கழுத்தில் அணிவித்தார். அப்போது அமைச் சர் இப்படிக் கூறினார்.

"நான் யாழ்ப்பாணங் வந்தது ரொம்ப சந்தோசங். இங்கே ஒரு வெங்காயம் நமக்கு மாலை போட்டது. அதுவும் சந்தோசங்" கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் 'கொல்' எனச் சிரித்தார்கள். வெங்காயமாலை போட்டவருக்கு முகம் கறுத்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ விஷ்ணுபுத்திரன்

வெண்ணிலவு பொழியும் முன்னிரவுப் பொழுது உயர்ந்து வளர்ந்த பனங்கூடல் களையும், பரந்து கிடக்கும் செம்மண் தோட்ட வெளிகளையும் கடந்து மெல்லிய நாதஸ்வர இசை காற்றில் மிதந்து வந்து கொண்டிருக்கிறது. ஒரு புனிதம் கலந்த கலகலப்பின் வாசனை இதமாக வீசிக் கொண்டிருக்கிறது.

இன்னமும் மின்சாரம் எட்டிப் பார்க்காத மண் ஒழுங்கையில் ஒரு பெண்கள் பட்டாளம் நகர்ந்து கொண்டிருக்கிறது. திருமணமான பெண்கள் பட்டுச் சேலையுடுத்தி, இருக்கும் நகைகள் மட்டு மன்றி இரவல் நகைகளையும் கொண்டு அலங் கரித்திருக்க, கன்னிப் பெண்கள் முழுப்பாவாடை யும் அரைத்தாவணியும் அணிந்து கழுத் தில் ஒரு மெல்லிய சங்கிலியும் நெற்றியில் இழுக்கப்பட்ட மெல்லிய திருநூற்றுக் கோடு களில் சிறிய கறுத்தப் பொட்டும் மின்ன, சிறுமிகள் தங்கள் பட்டுப்பா வாடைகள் நிலத்தில் பட்டு விடாமல் தூக்கிப் பிடித்து பாட்டிமார் பின்னால் தொடர, இடம் பெறும் அந்த பெண்களின் பவனியே ஒரு கண் கொள்ளாக் காட்சிதான்!

"இண்டைக்கு இந்திய மேளமாம்....!"

"இப்படித்தான் சொல்லுவாங்கள், அது ஏழாம், எட்டாம் திருவிழாவிற்குத்தான் வரும்"

"இல்லையனை திருவிழாக் காலப் பகுதிக்கு இம்முறை போயிலை நல்ல விளைச்சல். அவங்கள் எவ்வளவு செலவழிச்செண்டாலும் கொண்டு வந்திருவாங்கள்."

"ம்... அது தான் ஏரம்பர் இணுவிலுக்கும், அளவெட்டிக்கும் காலில சில்லுப் பூட்டிக் கொண்டு ஒடித்திரிகிறார்"

ஏரம்பர் என்பவருக்கு திருவிழாக் காலம் வந்தால் தனி 'மவுசு' வந்துவிடும். அவர்தான் திருவிழாக் காரர்களுக்கு கலைஞர்களை ஏற்பாடு செய்யும் தரகர். அதற்கிடையில் இப்படியொரு பாட்டி யின் குரலும் கேட்கும். "எடிபிள்ளை" கதவை வடி வாய்ப் பூட்டினனியோ? "ஓமெணை பூட்டியாச் சுது...நீ.. தொண தொணக்காமல் வா!" இப்படி பதில் கிடைக்கும் பாட்டிக்கு.

இப்படி பல ஒழுங்கைகளால் வரும் ஊர்வலங்கள் எல்லாம் கோவில் வெளி மண்டபத்தில் சங்கமமாகும். பெண்கள் தவில் வித்துவானின் பின்புறமும், ஆண்கள் நாதஸ்வர வித்துவானின் பின்புறமும் அமர்ந்து கொள்ளுவார்கள். ஏனை யோர் இசை வெள்ளத்தில் மிதக்க சில இளைஞர்களும் கன்னியர்களும் கண்களால் கதை பேசுவார்கள். அவை வளர்ச்சி பெற்று திருமணத் தில் முடிவதும் உண்டு, சில தற்கொலையில் முடி வதும் உண்டு.

இது யாழ். குடாநாட்டின் ஒரு கோவில் திருவிழா வில் சாதாரணமாக நடக்கும் காட்சிதான். சித்திரை மாதம் தொடங்கினால் புரட்டாதி மாதம் வரை வடக்கின் எங்கோ இரண்டு மூன்று ஊர்களில் கோவில் திருவிழாக்கள் தொடர்ந்து இடம் பெறும்.



நல்லூர், செல்வச்சந்நிதி, வல்லிபுரக் கோவில் என்பன வடபகுதிக்கு பொதுவான கோவில்கள். எல்லா ஊர்களைச் சேர்ந்தவர்களும் விரதம் இருப்பதுண்டு. திருவிழாவில் கலந்து கொள்வ துண்டு, அவற்றை விட கிராமப்புற கோவில் களின் திருவிழாக்கள் பிரத்தியேகமானவை. அக்கோவில்களில் திருவிழாக்கள் தொடங்கி விட்டால் அந்த ஊரும், சுற்றி உள்ள கிராமங் களும் விழாக்கோலம் பூண்டுவிடும்.

திருவிழா ஆரம்பமாகி விட்டால் அந்நாட்களில் அந்த ஊர் மக்கள் விரதம் இருப்பார்கள். தென்னிலங்கையில் அரச பணி செய்வோர், வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவோர் அனை வருமே லீவு போட்டுவிட்டு வந்து விரதம் இருப் பது முதல் ஏனைய திருவிழா நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்வார்கள். அதாவது கோவில் திரு விழாக்கள் மக்களின் வாழ்வுடன் ஒன்றிவிட்ட ஒரு சடங்காகவே அந்நாட்களில் விளங்கின.

காலையில் குளித்து தூய ஆடை அணிந்து உணவோ தேநீரோ அருந்தாமல் கோவிலுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சின் அலைகள்

# திருவிழாக் காலம்



சென்று வணங்கி காலைத் திருவிழா முடிந்த பின்பே தேநீர் அருந்துவார்கள். மதியம் வீட்டிலுள்ள அனைவரும் ஒன்றாயிருந்து விரதச் சோறு உண்பர். வாழையிலையில் உணவு உண்பது கட்டாயமான நடைமுறை. திருவிழா நாட்களில் விரதம் இருப்பவர்களின் வீடுகளில் மட்டுமன்றி அந்த ஊர் எல்லைக்குள்ளேயே மாமிசம் அனுமதிப்பதில்லை. மாலையில் கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமாகி இரவு சுவாமி வீதி உலா தொடங்க எப்படியும் அதிகாலையாகிவிடும்.

அந்நாட்களில் மக்களின் கலை, கலாசார மையங்களாக இத்திருவிழாக்கள் அமைந்த போதிலும் சாதி வேறுபாடுகளும் அவற்றில் இழையோடிக் கொண்டிருக்கும். அந்நாட்களில் கோவில் ஒரு தனிக்குடும்பத்தின் ஆதிக்கத்திலேயே இருக்கும். பரிபாலன சபைகள் எதுவும் இருந்ததில்லை. அவர்கள் எப்போதுமேநிலவுடமையாளர்களாகவுள்ள உயர் குடி வேளாளர் சமூகத்தினராகவே இருப்பார்கள். கொடியேற்றத் திருவிழாவினை அவர்களே நிகழ்த்துவார்கள்.

இந்தவேளாளர் சமூகத்தினரிலும் வெவ்வேறு பிரிவினர் உண்டு. அவர்கள் இரண்டாம் மூன்றாம் திருவிழாக்களை நடத்துவார்கள்.

இந்த முதல் மூன்று திருவிழாக்களாக அபிசேகம், காளாஞ்சி பெறுதல் வீதி உலா என சாதாரணமாகவே இடம் பெறும். பூஜை, வீதி உலா என்பவற்றுக்கான இசையாக கோவில் மேளம் என்று சொல்லப்படும் நிரந்தர வாத்தியக்காரர்களே வழங்குவார்கள்.

நான்காம் திருவிழாவிலிருந்து தேர், தீர்த்தம் தவிர்ந்த ஏனைய திருவிழாக்கள் அனைத்தும் குடிமக்கள் என்று கூறப்படுபவர்களால் நடத்தப்படும்.

இவர்கள் ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக் காசைத் தண்ணீராக செலவு செய்வார்கள். ஒவ்வொரு பிரிவினரும் முதல்நாள் நடந்ததற்கு மேலதிகமாக எதையாவது செய்து பெருமைப் பட்டுக் கொள்வார்கள்.

நான்காம் திருவிழா ஒரு சிகரம், சப்பறம், சாத்துப்படி, இரண்டு கூட்டு மேளம், ஒரு கூட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சின்ன மேளம் என ஆரம்பிக்கும். பின் ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து தேருக்கு முன்னே இறுதிநாட்களில் போட்டி உச்சம் பெறும்.

கோவில் முகப்புகள், வீதிகள் எங்கும் சிகரங்களால் நிறைக்கப்படும் விசேசமாக சப்பறங்கள், சாத்துப்படிகள் இணுவில் அளவெட்டி ஆகிய பகுதிகளிலிருந்து வரவழைக்கப்படும். ஐந்து கூட்டு, ஆறுகூட்டு என பிரபல தமிழ் நாதஸ்வர வித்துவான்களின் கச்சேரிகள் இடம் பெறும். இந்தியாவில் இருந்து தவில் கோஸ்ரிகள் வரவழைக்கப்படுவதுமுண்டு. சின்ன மேளம் என அழைக்கப்படும் கச்சேரிகள் இரண்டு மூன்று கூட்டுகளென கொண்டு வரப்பட்டு வெவ்வேறு இடங்களில் நடனம் இடம் பெறும். வானவேடிக்கைகள் வானைப் பிளக்கும்.





காரைநகர் சிவன் கோவில், கரணவாய் மூத்த நயினார் கோவில், யாக்கரைப் பிள்ளையார் கோவில், சுட்டிபுரம் ஐயனார் கோவில் ஆகிய கோவில்களில் திருவாடுதுற ராசரத்தினம் பிள்ளை, பிச்சையப்பா, காரைக்குறிச்சி அருணாசலம் பிள்ளை, சேதுராமன் சகோதரர்கள், சின்ன மௌலானா ஆகிய பிரபல வித்துவான்கள் அழைக்கப்பட்டு கச்சேரிகள் நடத்தப் படுவதுண்டு. அது மட்டுமன்றி உள்ளூரிலேயே கோடையிடி சண்முக சுந்தரம், இணுவில் சின்ன ராசா, கைதடி பழநி, அளவெட்டிப் பத்மநாதன் என இந்திய கலைஞர்களுக்குச் சமமாக மதிக்கப்பட்ட கலைஞர்களின் கச்சேரியும் இடம்பெறும். இதில் தட்சணாமூர்த்தியின் கச்சேரி என்றால் பல ஊர்களிலிருந்தும் ரசிகர்கள் வந்து குவிந்துவிடுவார்கள். கடைசியாய் எல்லாக் கோஸ்ரியினரும் இணைந்து போட்டி போட்டு நடத்தும் 'மேளச் சமா' விறுவிறுப்பும் புளகாங்கிதம் ஊட்டும் ஒரு நிகழ்ச்சியாகும்.

இதில் நம்பமுடியாத ஆச்சரியம் என்னவெனில் சங்கீதமேபடித்திராத பல முதியவர்கள் நாதஸ்வரம் வாசிக்கும் போது அவை என்னென்ன ராகமென அச்சிட்டுச் சொல்வார்கள். சுருதி தாளம் ஒரு சிறிது பிசகினாலும் அவர்கள் சலித்துக் கொள்வார்கள். குறிப்பாக தட்சணாமூர்த்தி தவில் வாசிக்கும் போது அரையிடம், காலிடம் என தாளங்களைப் பற்றி வியாக்கியானம் செய்வார்கள். அவர்கள் சங்கீதம் படிக்காவிட்டாலும் அவர்களின் அனுபவமும் ரசனையும் அவர்களை உன்னதமான ரசிகர்களாக்கியிருந்தது. ஒரு முறை கரணவாய் மூத்த விநாயகர் கோவிலில் திருவாடுறை ராசரத்தினம்பிள்ளை வராளி ராகம் வாசிக்கும் போது நாகபாம்பு வந்ததாகவும் அந்த ராகம் வாசித்து முடிந்ததும் பாம்பு கோவில் மூலஸ்தானத்துக்குள் சென்று மறைந்து விட்டதாகவும் பல பெரியவர்கள் கூறுவ துண்டு.

இதில் ஒரு முக்கிய விசயம் என்னவெனில் விவசாயம் செய்பவர்களாகவும், சீவல்த் தொழில் செய்பவர்களாகவும் இருந்த பாமர மக்கள் மத்தியில் அந்நாட்களில் உயர் மட்ட இசை ரசனை இருந்துள்ளது. ஏறக்குறைய ஒரு மணி க்கு அந்த தவில் நாதஸ்வர கச்சேரி நிறைவு பெற சின்ன மேளமென அழைக்கப்படும் சதுர்க்கச்சேரி ஆரம்பமாகும்.

இணுவில், அளவெட்டி, அச்சுவேலி, புத்தூர், கொக்குவில் போன்ற ஊர்களில் உள்ள சில கலைஞர்கள் இந்தியாவிலிருந்து சில நடனக் கோஸ்ரிகளை அழைத்து வந்து நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். இவர்களுக்கு ஆர்மோனியம், மிருதங்கம் வாசிப்பது, பிற்பாட்டுப் பாடுவது போன்றவற்றை இலங்கைக் கலைஞர்கள் மேற் கொள்வார்கள்.

புத்தூர் மார்க்கண்டு, கொக்குவில் சின்னத்துரை செற் என பல குழுக்கள் நடன நிகழ்ச்சிகளை திருவிழாவிற்கு வழங்கி வந்தன.

மேளம் முடிந்த பின்பு சின்ன மேளத்துடன் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பாட்டுக்காரர் வந்தமர்ந்து பாடத்தொடங்கியதுமே அங்குமிங்கும் நின்றவர்கள் எல்லோரும் ஓடிவந்து கோவில் மண்டபத்தில் குவிந்து விடுவார்கள்.

நடனமாடுபவர் களரிக்கு வந்ததும் இறைவணக்கப் பாடல்களே முதலில் பாடுவார்கள். 'திருவருள் புரிவாய் ஜெகன்மோகினி' 'எப்படிப் பாடினரோ' தந்தை இருந்தால் உனக்கிந்த போன்ற இசை நுணுக்கங்கள் நிறைந்த பாடல்களே மிகவும் தரமான முறையில் பாடுவார்கள். பின்பு அவர்கள் ஆடைமாற்ற உள்ளே போய்விட பிற்பாட்டுக் காரர் தன் ஆற்றலை வெளிப்படுத்துவர். பின் நடனமாடுபவர் களரிக்கு வந்ததும் நடனங்கள் ஆரம்பிக்கும். 'ஓரசிக்கும் சீமானே வா' 'ஆளை ஆளைப் பார்க்கிறரார் ஆட்டத்தைப் பார்த் திடாமல்' போன்ற அந்நாளைய கிளுகிளுப் பூட்டும் பாடல்களுக்கு நடனமாடுவார்கள்.

உரலில் நின்று உரலை உருட்டிக்கொண்டே நடனமாடுவது, இரு பித்தளைத் தட்டுகளை விரல்களால் பிடிக்காமல் உள்ளங்கையில் வைத்து கீழே விழுந்து விடாமல் சுழட்டிச் சுழட்டி நடனமாடுவது போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெறும். அதே வேளையில் இவர்களுடன் சில விசேட தகைமையுள்ள கலைஞர்களும் பங்கு கொள்வதுண்டு. இவர்களில் கிளாரிநெற் நடராஜன் பெருமதிப்புப் பெற்றவர்.

நடன நிகழ்வுகள் நிறைவு பெற ஏறக்குறைய அதிகாலை 4 மணியைத் தாண்டிவிடும்.

அடுத்து சுவாமி வீதி வலம்வரும் நிகழ்வு ஆரம்பமாகும். உள்வீதி சுற்றி வெளி வீதி உலாவர ஆரம்பிக்கும் போதே அங்கொன்றும் இங் கொன்றுமாக சிறிய வாணங்கள் தங்கள் விளை யாட்டைக் காட்ட ஆரம்பித்து விடும்.

கொட்டுவாணம், குருவிவாணம், பிரிதல் வாணம் என வாண வேடிக்கை வானை அலங் கரிக்கும். பந்தல் வாணம் எங்கும் நீளக் கோடுகள் வரைய சுவாமி ஊர்வலம் ஆரம்பமாகும். அதே போல் வண்ணக் கோடுகள் கொட்டுவாணத் திலிருந்து புறப்பட்டு வானில் குருவிகளை பறக்க வைக்கும்.

இப்படி இப்படியாக வானமெங்கும் வாணங்கள் அழகுக் கோலங்களை வரையும். இந்த வானங்களில் பிரத்தியேகமானது 'கர்ப்பம் கலக்கி வாணம்' இது புறப்படும் போது கர்ப் பிணிகள் பக்கத்தில் நிற்கக் கூடாது என்பார்கள். அதன் கர்ப்பத்தைக் கலங்கிவிடும் என்பார்கள். ஆனால் கிபிர் சத்தத்தைவிட ஒன்றும் மோசமானதல்ல. ஆனால் கிபிர் என்றால் என்னவென அறியாத காலத்தில் அது பயங்கரம்தான். அது வெட்ட வெளிகளில் போய் விழும்படிதான் அதனைச் செலுத்துவார்கள். அதை கிணற்றில் ஆடுகாலில் நட்டு துலாவில் ஏறிநின்று நெருப்புவைத்துவிட்டு ஓடி வந்து விடுவார்கள். அது பெரும் இரச்ச லுடன் மேலெழுந்து தூரத்தில் போய்விழும்.

சுவாமி வலம் வரும் போது வடக்கு வீதியில் வைத்து ஒரு குட்டி 'மேளச்சமா' இடம்பெறும். கிழக்கு வெளிக்கும் போது சுவாமி வாசலுக்கு வர வீதி உலா முடிந்து விடும். சப்பறத்தில் கடைசிப் பூஜை முடிய சின்ன மேளம் வந்து தேவாரம் படிப்பார்கள். அத்துடன் சுவாமி இறங்கிவந்து உள்ளே போகும்.

இத்திருவிழாக்கள் எமது கிராமிய பன்பாட்டில் ஒரு பிரதான அம்சமாக விளங்கின. பக்தியும் களியாட்டமும் கலந்த அற்புதமான ஆனால் தூய்மையான ஒரு நிகழ்வாக விளங்கும்.

இன்றோ இத்திருவிழாக்களின் அடிப்படை அம்சங்கள் மங்கிப் போக ஒரு இயந்திர மயமாக அவை மாற்றப்பட்டு விட்டன. ஊர் கூடி விழாவெடுக்கும் அந்த பண்பாடு மெல்ல மெல்ல மங்கிப் போய்க் கொண்டிருப்பதுதான் கவலை தரும் நிலைமையாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்தார்ஜி நகைச்சுவை



வகுப்பறையில் சர்தார்ஜியை எப்படி அடையாளம் கண்டுபிடிக்கலாம்?

ஆசிரியை கரும்பலகையில் எழுதுகிற போது தானும் கொப்பியில் எழுதி, ஆசிரியர் அழிக்கும் போது, தானும் அழித்தால், சந்தேகமேவேண்டாம்.... அவர்தான் சர்தார்ஜி!

தனது ஆட்டோவிலிருந்து அவசரமாக ஒரு சக்கரத்தைக் கழட்டிக் கொண்டிருந்தார் அந்த சர்தார்ஜி.

ஏன் ஒரு வீலைக் கழட்டுகிறீர்கள்? எனக் கேட்டார் பக்கத்தில் இருந்த நபர்.

இங்கே ரு வீலர் மட்டும்தான் நிறுத்தலாம் என்று போட்டிருக்கு. அதுதான் என்றார் சர்தார்ஜி.





ரயில் ரிக்கெட்டை தொலைத்து விட்டுத் தேடினார் சர்தார்ஜி.

பரவாயில்லை... நான் உங்களை நம்புகிறேன். நீங்கள் ரிக்கெட் வாங்கியிருப்பீர்களென்று தெரிகிறது என்றார் ரிக்கெட் பரிசோதகர்.

அது இருக்கட்டும். ரிக்கெட் இல்லை என்றால் நான் இறங்க வேண்டிய இடம் எப்படித் தெரியும்? என்றார் சர்தார்ஜி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனிது இனிது" இம்மாத இதழில் வெளியாகியுள்ள ஆக்கங்கள் தொடர்பான உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதி அனுப்பி வையுங்கள். உங்கள் கருத்துக்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும். கருத்துக்கள் உங்கள் விமர்சனப் பார்வையாக அமைதல் நல்லது. அத்துடன் சிறந்ததாகத் தெரிவு செய்யப்படும் கருத்திற்கு பரிசும் உண்டு. உங்கள் கருத்துக்களை இங்கு காணப்படும் கூப்பனுடன் இணைத்து அனுப்ப மறக்காதீர்கள்.

" அறிவை இனிதாய்ப் பகிர்ந்து அகத்தில் உறவை வளர்ப்போம் "

இனிது

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

தொலைபேசி. இல : ..............................

## பரிசுகள் பெற்றனர்

'இனிது இனிது' முதலாம், இரண்டாம் இதழ்களில் பிரசுரமான போட்டிகளில் கலந்து கொண்டு குலுக்கல் முறையில் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு உதயன் வெளியீட்டகத்தில் 03-09-2011 அன்று இடம்பெற்றது.

முதலாம் பரிசை பரந்தனைச் சேர்ந்த அசோகன் அனுசியா உதயன் பிரதம ஆசிரியர் கானமயில்நாதன் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்றார்.

இரண்டாம் பரிசை புத்தூரைச் சேர்ந்த வி. செல்வநாயகமும், மூன்றாம் பரிசை சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஜி. மேரிஜுப்ரெஷியாவும் உதயன் பொது முகாமையாளரிட மிருந்து பெற்றுக் கொள்கின்றனர்.










## சந்தாதாரர் ஆகுங்கள்!

இனிது இனிது உங்கள் இல்லத்தைத் தேடிவர சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள். ஒருவருட சந்தா 600ரூபா. ஆறுமாதங்களுக்கு 300ரூபா தபால் செலவு இலவசம் நேரிலோ. மணிஓடர் மூலமாகவோ பணத்தை செலுத்தலாம்.

*ஆசிரியர்*
*இனிதுஇனிது*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கங்கள்.
021 567 7609 - 077 077 3730



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அறியாப்பருவக் காதல்



பதின்மூன்று வயதிலிருந்து 18 வயது வரையிலான வயதையே ஆங்கிலத்தில் **'Teen Age'** என்கிறார்கள். அறியாப்பருவக்காதல் என்பது 'டீன்ஏஜில்' உருவாகும் காதலை மட்டுமே குறிப்பது அல்ல. இருவரும் சேர்ந்து தனித்து வாழத் தகுதி பெறாத காதலே அறியாப் பருவக் காதல் எனப்படுகிறது. இந்த வயதில்தான் கண்டிப்பாக எல்லா மனிதர்களும் காதலில் விழுகிறார்கள். மனசுக்குப் பிடித்தவர்கள் என்று எவரையாவது அடையாளம் கண்டுகொள்கிறார்கள். காதல் என்பதை உயிரினும் மேலாக நினைப்பார்கள். ஆனால் இந்தக் காலக்கட்டத்தில் காதலில் ஒரு மிகப்பெரிய குறை இருக்கும்.

அதாவது இன்று தான் பார்க்கும் ஓர் அழகி அல்லது அழகனைவிட சிறப்பாக இன்னொருவரைப் பார்க்க நேர்ந்தால் காதல் அப்படியே அவர் பின் ஓடிவிடும். அதுவரை இருந்த காதல் ஒத்துவராது என தனக்குள் முடிவு கட்டிவிட்டு அடுத்தக் காதலில் இறங்கிவிடுவார்கள்.



தன் மனதில் தோன்றும் ஆசைகள் அனைத்திற்கும் உருவம் கொடுக்க நினைப்பார்கள். தன்னிடம் என்னென்ன தகுதிகள் இருக்கின்றன என்பதை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் எதிரே இருப்பவரின் தகுதியினை மட்டுமே பார்ப்பார்கள்.

தனக்குப் பாடம் எடுக்கும் ஆசிரியர், ஆசிரியை, சினிமா நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்கள் என அவர்கள் காதலிக்கும் நபர்கள் இயல்பு வாழ்க்கையில் இல்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

இப்படிப்பட்ட நபர்களை மற்ற பிரிவில் சேர்க்காமல் மிக எளிதான வாழ்வினை சமாளிக்க முடியாதவர்கள் என்ற பிரிவில் அறிவியலாளர்கள் சேர்த்து விடுகிறார்கள்.

காதலை அல்லது காதலனை வாழவைப்பதற்கு அடிப்படைத் தேவையான வருமானம். மன உறுதி, உடல் உறுதி போன்றவை இல்லாதவர்கள் எல்லாம் இந்த வகையில் வருவார்கள். பணம் சம்பாதிக்காதவர்களுக்கு காதல் வரக்கூடாதா எனக் கேட்கலாம். காதல் வருவதற்கு வருமானம் தடையாக இருக்காது.

ஆனால், நாம் காதலில் வெற்றி பெறுவதைப் பற்றியும் திருமணம் முடிப்பது பற்றியும் அதற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பின்னரும் வாழ்நாள் முழுவதும் காதல் தொடர்வதற்கான வழி தேவை என்பதால் வருமானம் இல்லாதவர்கள் காதலின் அடுத்த கட்டத்தை தொட முடியாது என்பதுதான் நிஜம்.

எப்படி ஒரு 'டீன் ஏஜ்' வயதில் திருமணம் என்பது ஏற்றுக்கொள்ளப்படாது என்பதில் சமூகம் உறுதியாக இருக்கிறதோ, அப்படியே காதலில் விழுந்த ஆண் அல்லது பெண்ணிடம் வாழ்வதற்கு ஆதாரத் தேவையான வருமானம் இல்லாத பொழுது அந்தக் காதலும் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படாது.

வருமானம் உழைப்பு இல்லாதவர்களும் 'டீன் ஏஜ்' வயதினரும் காதலிக்க முழுத் தகுதி பெற்றவர்கள். எனும் பொழுது காதலிக்கப்படவும் இவர்களுக்கு உரிமைஇருக்கிறது. ஆனால் வெற்றி.....?

அறியாப்பருவ வயதில் ஏற்படும் காதலை சட்டமும் சமூகமும் ஏற்றுக்கொள்ளாது அதே போல் வருமானம் இல்லாதபட்சத்தில் காதலின் அடுத்தக்கட்டத்தை தொட சம்பந்தப்பட்ட காதலர்களே விரும்பமாட்டார்கள். இதுவரை வருமானம் இல்லை என்றாலும் வருமானத்திற்கு தீவிர முயற்சி எடுக்கும் காதலர்கள் தவிர மற்றவர்கள் இக்காதலிலிருந்து வெளியேறிவிடலாம்.

**குறும்பு....**



# கூடு!



வெளியே வரமுடியாமல்
பார்வைக்கு மட்டும்
இன்னும் வெளிச்சம்
தெரியவில்லை.
நாலா பக்கமும்
இருள் வந்து மூடும் அறை.
யன்னல் திறக்கும் மட்டும்
ஒளிச்சாரல்
எங்கே போகும்.
முட்டி மோதி
மூடியிருக்கும் சுவரினை
மட்டும்
சூடேற்றும்
நாமாக திறந்தால் மட்டும்
முடிகிறது!
ஆனாலும்
அதன் உட்புறச்சுவரில்
சூடு தெரிகிறது.

■ செல்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முருங்கை மரமும் கற்பகத்தருதான்!

மரங்கள், செடிகள், கொடிகள், புல், பூண்டு என இயற்கை படைத்த தாவர இனங்கள் அனைத்தும் மனித இனத்திற்கு ஏதோ ஒரு வகையில் பயன்படுகின்றன. பிராண வாயுவை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் இவைகளே. மழையை கொடுக்கும் வருண பகவானும் இவைகளே.

மரங்கள் அனைத்தும் ஏதோவொரு வகையில் மக்களுக்குப் பயன் தருபவை. இம்மரங்கள்தான் மக்களின் உயிர்நாடிகள். பல மரங்களுக்கு மருத்துவத் தன்மைகளும் உள்ளன. இவ்வகையில் அதிகமான வீட்டு வளவுகளில் வளர்க்கப்படும் முருங்கை மரம் பற்றி தெரிந்து கொள்வோம்.

முருங்கையை கற்பகத் தரு என்றே சித்தர்கள் அழைக்கின்றனர். முருங்கையின் பயனை நம் முன்னோர்கள் ஆண்டாண்டு காலமாக அனுபவித்து வந்துள்ளனர். வீட்டிற்கு ஒரு முருங்கை வளர்த்து வந்தால் குடும்பத்தில் அனைவரும் ஆரோக்கியமாக வாழ்வார்கள். பழங்காலத்தில் அரசர்கள் வீரர்களுக்கு முருங்கைக் கீரையை உணவாகக் கொடுத்து வந்துள்ளனர். அதனால் அவர்கள் பலமுடன் போர் புரிந்தனர் என வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பொதுவாக முருங்கை அதிக வலுவில்லாத மரவகையாகும். எளிதில் முறிந்துவிடும் தன்மை கொண்டது. இதனால் மரத்தில் யாரும் ஏறி கீழே விழுந்து விடக்கூடாது என்பதற்காகவே, முருங்கை மரத்தில் பேய் உள்ளது என்று முன் னோர்கள் கூறினார்கள். முருங்கையின் அனைத்து பாகங்களுமே அதிக மருத்துவக் குணம் கொண்டவை.

**முருங்கை இலையைப்பற்றி அகத்தியர் இவ்வாறு கூறுகின்றார்.**

செரிமந்தம் வெப்பந் தெறிகுந் தலைநோய் வெறி
மூர்ச்சை கண்ணோய் விலகும்-மறமே
நெருங்கையிலை யொத்தவிழி நேரிழையே
நல்லமுருங்கையிலையை மொழி.
அகத்தியர் குணபாடம்

முருங்கை இலையால் மந்தம், உட்சூடு, தலைநோய், வெறிநோய், மூர்ச்சை, கண்ணோய் ஆகியவை நீங்கும் முருங்கைக் கீரையை சமைத்து உண்டுவந்தால் உடல் வலுப்பெறும். இரத்தம் சுத்தமடையும். இதில் அதிகளவு இரும்புச்சத்து நிறைந்துள்ளதால் இரத்த சோகை நீங்கும். மெலிந்த உடல் உள்ளவர்கள் வாரம் இருமுறை முருங்கைக் கீரை உண்டு வந்தால் உடல் தேறும். வயிற்றுப்புண்ணை ஆற்றும். அஜீரணக் கோளாறுகளை நீக்கி மலச்சிக்கலைப் போக்கும்.

இரத்தத்தில் கலந்துள்ள தேவையற்ற நீர்களை பிரித்து வெளியேற்றும். நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு போன்ற வற்றைப் போக்கும். உடல்சூட்டைத் தணிக்கும் இதனால் கண்சூடு குறைந்து, பார்வை நரம்புகள் வலுப் பெறும் பித்தத்தைக் குறைக்கும். இளநரையைப் போக்கும். சருமத்தைப் பள பளக்கச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்களுக்கு உண்டாகும் உதிர இழப்பைப் போக்க முருங்கைக்கீரை சிறந்த நிவாரணி. தாய்ப் பாலை ஊறவைக்கும். வாரம் இரு முறையாவது பெண்கள் கண்டிப்பாக முருங்கைக் கீரையை உணவில் சேர்த்து வர வேண்டும். முருங்கைக் கீரை சிறியவர் பெரியவர்கள் வரை அனைவருக் கும் ஏற்றதாகும்.

**முருங்கைப் பூ**


இது நாவின் சுவையின்மையை மாற்றும் தன்மைகொண்டது. முருங்கைப் பூவை பாலில் வேக வைத்து அந்த பாலை வடிகட்டி அருந்தி வந்தால் கண்கள் குளிர்ச்சி பெறும். பித்த நீர் குறையும். வாத, பித்த, கபத்தின் செயல்பாடு சீராக இருக்கும்.

முருங்கைப் பூவை நிழலில் உலர்த் திப் பொடி செய்து காலையில் கஷாயம் செய்து அதனுடன் பனைவெல்லம் கலந்து அருந்தி வந்தால் உடல் வலுவடைவதுடன், நரம்புகள் புத்துணர்வு பெறும். அதுபோல் பொடியை தேனில் கலந்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் ஆண்மை பெருகும். இல் லற உறவில் நாட்டம் கொள்ளச் செய்யும். பெண்களுக்கு வெள் ளைப்படுதல் குணமாகி கர்ப் பப்பை வலுப்பெறும்.









**முருங்கைப் பிஞ்சு**

முருங்கைப் பிஞ்சை எடுத்து சிறி தாக நறுக்கி நெய்யில் வதக்கி அதனை உண்டு வந்தால் இரத்தம் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்க ளும் நீங்கும். இரத்த சிவப்பணுக் களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இதில் அதிக கல்சியம் சத்து இருப் பதால் எலும்புகளுக்கு ஊட்டம் கிடைக்கும். எலும்பு மஞ்ஜைக ளைப் பலப் படுத்தி இரத்தத்தை அதிகம் உற்பத்தி செய்யும். ஆண்மைசக்தியைத் தூண்டும்.

**முருங்கைக் காய்**

இது அதிக சத்துக்களைத் தன்னகத்தே கொண் டது. உணவில் சுவையை அதிகரிக்கக் கூடியது. அனைவரும் விரும்பிச் சாப்பிடும் காய்தான் முருங்கைக்காய். இது மலச்சிக்கலைப் போக்கும். வயிற்றுப் புண்ணை ஆற்றும். மூல நோய்க்கு சிறந்த மருந்தாகும். சளியைப் போக்கும்.

**முருங்கை விதை.**

முற்றிய முருங்கை விதைகளை எடுத்து காய வைத்து லேசாக நெய்யில் வதக்கி பொடியாக்கி பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால், ஆண்மை பெருகும். விந்தணுக்களின் எண்ணிக்கை அதி கரிக்கும். நரம்புகள் பலப்படும், உடல் வலுப் பெறும். உடல் சூடு தணியும்.

**இலைக்காம்பு**

சிலர் முருங்கைக்கீரை சமைக்கும் போது அதன் காம்புகளை குப் பையில் போட்டு விடுவார்கள். ஆனால் இந்த காப்பிலும் அதிக மருத்துவக் குணம் உள்ளது.

முருங்கை இலைக்காம்புகளை வீசி எறிந்து விடாதீர்கள். அவற்றை சிறிதாக நறுக்கி அவற்று டன் கறிவேப்பிலை, சீரகம், சின்ன வெங்காயம், பூண்டு, சோம்பு, மிளகு இவற்றைச் சேர்த்து 'சூப்' செய்து அருந்தி னால், நரம்புகள் வலுப்பெறும் தலையில் கோர்த்துள்ள நீர்கள் வெளியேறும் வறட்டு இருமல் நீங்கும். இரு பாலாருக்கும் நல்ல உடல் வன்மையைத் தரக்கூடி யது.

**முருங்கைப் பட்டை**

முருங்கைப் பட்டையைச் சிதைத்து சிறிது உப்பு சேர்த்து வீக் கங்களின் மீது வைத்து கட்டி னால் வீக்கம் குறையும். முருங் கைப் பிசின் விந்துவைப் பெருக் கும். சிறுநீரைத் தெளிய வைக்கும்.

**முருங்கை வேர்**

வேரின் சாற்றுடன் பால் சேர்த்து கொதிக்க வைத்து அளவாக அருந்தினால் விக்கல், இரைப்பு, முதுகுவலி நீங்கும்.பார்த்தீர்களா சாதாரணமாக எங்கள் வீட்டு வளவுகளில் வளரும் முருங்கை மரங்களில் எவ்வளவு விடயம் அடங்கியிருக்கிற தென்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொனிக்கா லிவின்ஸிக்கு தற்போது வயது முப்பத்தேழு. பில் கிளிங்டன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வெள்ளை மாளிகையில் பணியாற்றியவர். அப்போது மொனிக்காவிற்கும் கிளிங்டனுக்குமிடையிலான உறவு குறித்து பரபரப்பான செய்திகள் வெளியாகியிருந்தன.

கிளிங்டனின் பெயருக்கு அது அபகீர்த்தியை ஏற்படுத்தியதுடன். அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து வெளியேறியமைக்கும் அதுவே காரணமாகவும் அமைந்தது.

*1974*இல் பிறந்தவரான மொனிக்கா *1995*ஆம் ஆண்டு வெள்ளை மாளிகையில் பணியில் இணைந்தார். அப்போது அவருக்கு வயது இருபத்திரண்டு. கிளிங்டனுக்கும் மொனிக்காவுக்கும் இடையிலான உறவு குறித்து வெளியான தகவல்களையடுத்து மொனிக்காவும் அவரது பணியிலிருந்து விலக வேண்டி ஏற்பட்டது.

இது நடந்து பதினைந்து வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் மொனிக்கா திருமணம் முடிக்காமலேயே வாழ்கின்றார். அவர் இன்னமும் கிளிங்டன் மீது காதலாக இருப்பதால் தான் இவ்வாறிருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது. வெற்றிகரமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடத்துபவராக, மொடலிங் கலைஞராக பல நாடுகளுக்கும் சென்று வந்துகொண்டிருந்த மொனிக்கா இதுவரை வேறு எவரையும் காதலிக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

மொனிக்கா இன்னும் கிளிங்டனுடன் காதலாகவே இருக்கின்றார். அவளால் அவரை மறக்க முடியவில்லை என மொனிக்காவின் தோழிகள்

# பில்கிளிங்டனுடன் இன்னும் காதலாகவே இருக்கின்றேன்.





ஜெகன்






கூறுகின்றனர். மொனிக்காவும் ஒரு சஞ்சிகைக்கு பேட்டி வழங்கிய போது அவரை விட எவராலும் என்னை மகிழ்ச்சிப்படுத்த முடியாது எனக் கூறியிருக்கின்றார்.

மொனிக்கா தற்போது நிரந்தரமான தொழில் ஏதுமின்றி கலிபோர்னியா மாநிலத்திலுள்ள லொஸ்ஏஞ்ல்ஸில் வசித்து வருகின்றார். முன்னதாக அவர் கைப்பைகளை வடிவமைப்பவராகவும் அதன் விற்பனை ஊக்குவிப்பாளராகவும் கடமையாற்றினார். அத்துடன் அவர் 'மொனிக்காவின் கதை' என்ற புத்தகத்தை எழுதுவதில் அன்றூ மோட்ரென் என்பவருடன் பங்கேற்று ஒரு இலட்சம் டொலர்களை சம்பாதித்துள்ளார்.

2006 இல் லண்டன் பொருளாதாரக் கல்லூரியில் சமூக மனோதத்துவவியல் பட்டப் படிப்பினை மேற்கொண்டதும் முன்னர் செய்து வந்த கைப்பைத் தொழிலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு தற்காலிகமாக இங்கிலாந்திலேயே தங்கிவிட்டார்.

மொனிக்கா கிளிங்டனுடனான தனது உறவு 'எல்லை மீறியதல்ல. எல்லைக்குட்பட்ட சில மீறல்கள்' என்பதாகத் தெரிவித்திருந்தார். ஆனாலும் தான் அணியும் அவருக்கு பிடித்தமான நீல நிற ஆடையை அவரது உறவுக்கான ஆதாரம் எனவும் கூறினார். கிளிங்டனோ தேசியத்தொலைக்காட்சி ஒன்றில் தோன்றி இறுகிய முகத்துடன் தான் அப்பெண்ணுடன் பாலியல் உறவு வைத்திருக்கவில்லை எனத் தெரிவித்தார்.

பின்னர் கிளிங்டன் ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் அப்போது தன்னையும் தனது குடும்பத்தினரையும் பாதுகாப்பதற்காக அவ்வாறு கூறியதாகவும் உண்மையில் தனக்கு மொனிக்காவுடன் பாலியல் உறவு இருந்ததாகவும் தெரிவித்திருந்தார். எனது வாழ்க்கை எனும் அவரது சுயசரிதை நூலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். அத்துடன் மொனிக்காவுடனான உறவு தனது வாழ்க்கையின் ஒரு இருள் சூழ்ந்த பகுதி எனவும் அது தன்னைவெள்ளை மாளிகையிலிருந்து வெளியேற்ற வழிசமைத்தது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

மொனிக்கா அப்புத்தகத்தை பார்த்துவிட்டு மனங்குழம்பினார். அவர் எங்களது உறவைப் பற்றி வெளிப்படையாக கூறுவார் என எதிர் பார்த்திருக்கவில்லை. என்றாலும் அதனை நான் பெரிதுபடுத்த விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால் இப்போதும் நான் பில்லுடன் காதலாகவே இருக்கின்றேன் என்கிறார் மொனிக்கா பதினைந்து வருடங்களாக கிளிங்டனின் மனச்சிறையிலிருந்த மொனிக்கா லிவின்ஸ்கி இன்னும் திருமணம் முடிக்கவில்லை. எவரையும் காதலிக்கவும் இல்லை என அவளது தோழிகள் குறிப்பிடுகின்றனர்.

கிளிங்டனைப் போன்று தன்னை மகிழ்ச்சியாக வைத்திருக்கக்கூடிய வேறு ஒரு ஆணை தனது வாழ்க்கையில் சந்திக்கவில்லை என மொனிக்கா கூறியதாகவும் மொனிக்காவின் தோழி ஒருவர் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முருகதாஸ் இயக்கும்

# 7 ஆம் அறிவ!

ஏ.ஆர்.முருகதாஸ் மீண்டும் சூர்யாவை வைத்து '7ஆம் அறிவு' என்ற படத்தை இயக்கி வருகின்றார். இப்படம் சித்தர் போகரின் வரலாறு என்ற தகவல் வெளியாகியிருக்கிறது.

இந்திய மண்ணில் இருக்கும் அமனுஷ்யம், சித்தர்களின் சித்து விளையாட்டுகள், போகர் சீன தேசத்திற்கு வான்வழியாக பறந்து சென்று அங்கு பல ஆண்டுகள் செய்த சாதனைகள், அங்குள்ள அவர் கோயிலில் இருக்கும் மர்மம் என்பன பற்றி இதுவரை வெளிவராத 2000 வருட பழமையான மர்மங்களை இப்படம் வெளிக்கொணரும் என தெரிவிக்கப்படுகின்றது.

7ஆம் அறிவு என்ற டைட்டிலில் அதன் பொருள் மனிதனின் ஆறாம் அறிவுக்கு அப்பாற்பட்டு ஒரு அறிவு இருக்கிறது என சொல்லாமல் சொல்கிறது. அது சித்தர்களின் அணு அளவு சுருங்குதல், காற்றில் கலத்தல், பெரும் உருவம் எடுத்தல், சிறு உருவம் எடுத்தல், சித்துக்கள் செய்தல் பற்றிய பிரம்மாண்டமான காட்சிகள் கொண்ட கதையாக இருக்கலாம் எனவும் அப்படியிருப்பின் மிக சுவாரஸ்யமாக இருக்கும் எனவும் தமிழ் சினிமா வட்டாரம் கூறுகின்றது.

சூர்யாவின் மிக முக்கிய திருப்புமுனையை ஏற்படுத்தும் படமாக இது அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

"கற்பனையே செய்யமுடியாத அளவுக்கு 'கலர் புல்' கனவை நனவாக்கிக்டோம். அர்த்தமுள்ள பிரம்மாண்டம் என்று சொல்லலாம். உதயநிதி ஸ்டாலின் அதற்கு பெரிய ஒத்துழைப்பு கொடுத்தார். ஏழாம் அறிவு படத்தின் ஸ்பெஷல் என்னவெனில் இதில் 'பீரியட் பிலிம்' ஸையும், 'சயின்ஸ் பிக்ஸ்' னையும் கலந்து இருக்கிறேன். தமிழ் ரசிகர்களுக்கு நிச்சயம் இந்த படம் பெரிய ஆச்சரியம் தொடுக்கும். நான் இவ்வளவு நம்பிக்கையா பேசும் அளவுக்கு படம் பிரமாதமா வந்திருக்கு" என்று கூறுகின்றார் இயக்குனர்.

படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக ஸ்ருதி நடிக்கிறார்.

முன்னர் சூர்யாவை வைத்து முருகதாஸ் இயக்கிய கஜனி படம் வெற்றிப்படமாக அமைந்தது ஆனால் அப்படத்தை கிறிஸ்டோபர் நோலனின் 'மெமண்டோ' படத்தின் பாதிப்பில் ஏ.ஆர்.முருகதாஸ் எடுத்தார்.

7ஆம் அறிவு படமும் நோலனின் 'இன்செப்ஷன்' படம்தான் எனும் சிலரின் வதந்திகள் குறித்து முருகதாஸ் கொதித்துப் போனார்.


கதாநாயகி ஸ்ருதி 7ஆம் அறிவு படத்தின் கதை என்ன என்று தெரிந்தவர் என்பதால் அதற்கான விளக்கத்தைக் கொடுத்துள்ளார். அதாவது 7ஆம் அறிவுக்கும் இன்செப்ஷனுக்கும் எந்த் சம்பந்தமும் இல்லை என்று அவர் விளக்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மூளையின் முழுத்திறன் இவ்வளவுதான்.

## அதிர்ச்சி தரும் ஆராய்ச்சி முடிவு!



மனிதனின் சமீபத்திய அறிவியல் கண்டுபிடிப்புகள் பலவும் வியப்பின் விளிம்பிற்கு நம்மை அழைத்துச் செல்கின்றன. இதற்கு காரணம் மனித மூளையின் சக்திதான்.

இதற்கு முன் மனித மூளை பற்றி ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள் பலர் திறமையற்ற மனிதர்கள் தனது மூளையின் சக்தியில் குறைந்த அளவு மட்டுமே பயன்படுத்துவதாகவும் திறமையானவர்கள் (விஞ்ஞானிகள் போன்றோர்) தங்கள் மூளையின் ஆற்றலை அதிக அளவு பயன்படுத்துகிறார்கள் என்றும் கூறியிருந்தார்கள்.

ஆனால், சமீபத்திய ஆராய்ச்சிகள் மனித மூளை பற்றி ஓர் அதிர்ச்சி கலந்த உண்மையை கூறுகிறது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக பேராசிரியர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியில் ஒவ்வொரு மனிதனும் தனது மூளையை 100வீதம் பயன்படுத்துகிறான் எனவும், மனித மூளையின் சக்தி இவ்வளவுதான் எனவும் கூறியுள்ளார்கள்.


நரம்பு உயிரியல் பேராசிரியர், சைமன் லாலின் மூளை சிறப்பான வடிவத்தை பெறுவதற்கும் திறமையாக செயல் படுத்துவதற்கும் தகுந்த ஆற்றல் தேவை என்றும், மனிதனால் தனது மூளையை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் செயல்படுத்த முடியாது என்றும் கூறுகிறார்.

மூளையின் வெவ்வேறு பகுதிகள் இழைகளால் இணைக்கப்பட்டுள்ளதாகவும் மிகுந்த அறிவாளிகளின் மூளையில் இந்த இணைப்புகள் சிறப்பாக உள்ளதாகவும் குறைவான அறிவுடையவர்களுக்கு இந்த இணைப்பு சிறப்பாக இல்லாமல் இருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் உளவியல் துறை பேராசிரியர் எட் புல்மோர் கூறுகையில் மிகுந்த அறிவாளிகளுக்கு மூளையில் இழைகள் சிறப்பான இணைப்பை கொண்டிருப்பதால் கட்டளைகள் உடனடியாக மூளையின் பிற பகுதிகளுக்கு அனுப்பப் படுவதாகவும் இந்த இணைப்பு சிறப்பாக அமையப் பெறாதவர்ளின் மூளையில் கட்டளைகள் மிக மெதுவாக பரிமாற்றம் செய்யப் படுவதாகவும் கூறுகிறார்.

சிறந்த மூளைத் தொகுப்பிற்கு சிறந்த நுண்ணறிவு திறனுக்கு IQ நெருங்கிய தொடர்பு உண்டு என்கிறார் இவர்.

இவர்கள் ஆராய்ச்சியில் ஆறுதல் தரும் விடயம் உடலின் சக்தியை அதிகரிப்பதன் மூலம் மூளையின் ஆற்றலும் அதிகரிக்கும் என்பதுதான். இதைத்தான் நம்மவர்கள் சுவரில்லாமல் சித்திரம் இல்லை என்று சொல்லியிருப் பார்களோ.....?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லியோ டால்ஸ்டாய் உலகப்புகழ்பெற்ற படைப்பாளி 1828ல் பிறந்த இவர் 1910ல் மறைந்தார். எண்பத்திரண்டு வயது வரை இவர் ஏராளமான கதைகள், நவீனங்கள், கட்டுரைகள், நாடகங்கள் என்பனவற்றை எழுதினார்.

வாழ்நாள் முழுவதும் எழுதிக் கொண் டே இருந்தார். சிறுவர்களுக்காக அவர் எழுதிய கதைகளும் பிரசித்தமானவை.

# இரண்டு சகோதரர்கள்



இரண்டு சகோதரர்கள் பிரயாணம் செய்து வந்தனர். நண்பகலில் அவர்கள் ஒரு வனத்தில் ஓய்வெடுத்துக் கொள்வதற்காகப் படுத்திருந்தனர். அவர்கள் விழித்து எழுந்த பொழுது, அருகில் ஒரு கல் நிறுத்தப்பட்டிருந்ததைக் கண்டனர். அதில் ஏதோ சில எழுத்துக்களும் எழுதப் பெற்றிருந்தன. அவர்கள் அருகிலே சென்று பார்த்தார்கள். கல்லில் எழுதியிருந்த வாசகம் இது:

'இந்தக் கல்லைப் பார்க்கிற எவரும் காலை நேரத்தில் காட்டுக்குள் சென்றால், அங்கே ஓர் ஆறு காணப்படும். அவர் ஆற்றில் நீந்தி அக்கரை செல்ல வேண்டும். அங்கே ஒரு பெண் கரடியையும் அதன் குட்டிகளையும் காணலாம். குட்டிகளை எடுத்துக் கொண்டு, திரும்பிப் பார்க்காமலே சென்றால் மலையின் உச்சியில் ஒரு மாளிகை இருக்கும். அதிலே அவர் இன்பம் அடைவார்.'

அவர்கள் அவ்வாசகத்தைப் படித்ததும், இளையவன், "நாம் இருவரும் சேர்ந்து செல்வோம். அண்ணா! ஆற்றில் நீந்தி, கரடிக் குட்டிகளை மலை மேலுள்ள மாளிகைக்கு எடுத்துக் கொண்டு போவோம் அங்கே இருவரும் சுகமாயிருக்கலாம்!" என்று சொன்னான்.'

அதைக் கேட்டு மூத்தவன் மறுத்துப் பேசினான்:

"கரடிக் குட்டிகளைத் தேடிக் கொண்டு நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனத்திற்குள் வரப் போவதில்லை. நீயும் போக வேண்டாம் என்றுதான் நான் ஆலோசனை சொல்லுவேன். முதலில் இந்தக் கல்லில் எழுதியிருப்பது உண்மைதானா என்பது எவருக்கும் தெரியாது. ஒரு வேளை வேடிக்கைக்காக இப்படி எழுதியிருக்கலாம். நாம் படித்துப் பார்த்ததே சரியோ, தவறோ தெரியவில்லை. இரண்டாவதாக, எழுதியிருப்பது உண்மைதான் என்றாலும், நாம் காட்டுக்குள்ளே செல்லும் பொழுது இருட்டி விட்டால், நதியை நாம் காண முடியாது. நாம் திசை தெரியாமல் தடுமாறி நிற்போம்! நதியை நாம் கண்டு கொண்டாலும், அதில் எப்படி நீந்துவது? அது அகலமாயிருக்கலாம்; வெள்ளம் வேகமாகப் பாய்ந்து கொண்டிருக்கலாம். மூன்றாவதாக, நதியை நாம் நீந்திக் கடந்தாலும், கரடியிடமிருந்து குட்டிகளைப் பிரித்தெடுப்பது எளிதென்றா நீ எண்ணுகிறாய்? கரடி நம்மைப் பிடித்துக் கொள்ளும். இன்பமடைவதற்குப் பதிலாக வீணில் நாம் அழிந்து போவோம். நான்காவதாக, கரடிக்குட்டிகளை நாம் எடுத்துக் கொண்டு வந்தாலும், ஓய்வெடுத்துக் கொள்ளாமல் உடனே மலைமேலே ஏற முடியுமா? எல்லாவற்றிற்கும் மேலாக மாளிகையில் எத்தகைய இன்பம் கிடைக்கும் என்று கல்லில் விளக்கமாய்த் தெரியவில்லை. ஒரு வேளை அந்த இன்பம் நமக்கு உதந்ததாக இல்லாமல் போகலாம்!"இளையவன் பின்னுவருமாறு சொன்னான்: "என் கருத்துப்படி நீ சொல்வது சரியாகத்தோன்றவில்லை. கல்லிலுள்ள எழுத்துக்கள் காரணம் இல்லாமல் எழுதப்பெற்றிருக்க மாட்டா. மேலும் எல்லாம் தெளிவாக உள்ளன. முதலாவதாக, நாம் முயற்சி செய்வதால் நமக்கு ஒரு கேடும் வரப்போவதில்லை. இரண்டாவதாக, நாம் போகாவிட்டால், வேறு எவனாவது கல்லிலுள்ளதைப் படித்தது விட்டு இன்பத்தை அடைவான். மூன்றாவதாக, நாம் முயற்சி செய்து பாடுபடாவிட்டால், உலகில் எதிலுமே வெற்றி பெற முடியாது. நான்காவதாக, நாம் எதற்காவது அஞ்சி ஒதுங்கினோம் என்று யாரும் சொல்ல இடமிருக் கக் கூடாது."

மூத்தவன், அவனுக்கு மறுமொழியாக இரு நீதிகளை நினைவுறுத்தினான். "பெரிய இன்பத்தை விரும்பி, இருக்கிற இன்பத்தையும் இழந்து விடக் கூடும்" என்றும்' புதரிலுள்ள இரு பறவைகளைக் காட்டிலும் கையிலுள்ள ஒரு பறவை மேல்' என்றும் பழமொழிகள் உள்ளன.

இளைய சகோதரன், "இலைகளைக்கண்டு அஞ்சுபவன் வனத்திற்கு செல்லக் கூடாது என்றும், அசையாது கிடக்கும் கல்லின் அடியில் நீர் ஊறாது' என்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றுபதில் உரைத்தான்.

பிறகு இளையவன் வனத்திற்குள் செல்லக் கிளம்பி விட்டான். மூத்தவன் அங்கேயே தங்கியிருந்தான்.

இளைய சகோதரன் காட்டினுள் சென்று ஆற்றைக் கண்டான். அதை நீந்திக் கடந்து பெண் கரடியைப் பார்த்தான். அது அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. உடனே கரடிக் குட்டிகளை எடுத்துக் கொண்டு, அவன் திரும்பிப் பாராமலே மலை மீது ஏறிச் சென்றான். அவன் அதன் உச்சியை அடைந்ததும், அவனை அழைத்துச் செல்வதற்கான வாகனத்துடன் மக்கள் கூட்டமாக வந்திருந்தனர். நகருக்குச் சென்றதும், அவர்கள் அவனையே தங்கள் மன்னனாக ஏற்றுக் கொண்டார்கள்.

ஐந்து ஆண்டுகள் அவன் அங்கே ஆட்சி செலுத்தி வந்தான். ஆறாவது ஆண்டில், அவனை விட வல்லவனான மற்றோர் அரசன், அவனை எதிர்த்துப் படையெடுத்து வந்து நகரைக் கைப்பற்றிக் கொண்டு, அவனை வெளியே துரத்தி விட்டான்.


மீண்டும் அந்த இளைய சகோதரன் நாடோடியாகப் பல இடங்களுக்கும் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். ஒருநாள் அவன் தன் அண்ணன் வசித்து வந்த வீட்டுக்குச் சென்றான். மூத்தவன் ஒரு கிராமத்தில் இருந்தான். வாழ்வில் பெரிய பணக்காரனாக ஆகாமலும், வறியவனாக ஆகாமலும், ஒரே நிலையில் இருந்து வந்தான். இரண்டு சகோதரர்களும் சந்தித்ததில் பேருவகை கொண்டு, தங்களுக்கு அதுவரை நேர்ந்த நன்மை தீமைகளைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டார்கள்.

கடைசியில் மூத்தவன், "நான் சொன்னதுதான் சரியென்று இப்பொழுது உனக்குப் புலப்படும். இங்கு நான் அமைதியாகவும் சுகமாகவும் வாழ்ந்து வருகிறேன். நீயோ, மன்னனாக இருந்த போதிலும், எவ்வளவோ துன்பத்திற்கு ஆளாகியிருந்தாய்" என்று கூறினான்.

இளையவன், "காட்டுக்குள் சென்றதற்கோ, மலை மேல் ஏறியதற்கோ நான் வருந்தவேயில்லை. இப்பொழுது என்னிடம் எதுவுமில்லை என்றாலும்,எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அனுபவங்களைப் பெற்றிருக்கின்றேன். உனக்கோ நினைத்துப் பெருமை கொள்ளக் கூடிய அனுபவமே இல்லையே!" என்று கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணு உலைகளால் ஏற்படும் ஆபத்து!

யுரேனியம் மற்றும் புளூட்டோனியம் போன்ற அணுசக்தி வேதியற்பொருட்களிலிருந்து மின் உற்பத்திசெய்ய, அவற்றை அணு உலைகளில் அடைத்துவைத்து பயன்படுத்துவார்கள். அணு உலைகளில் பல வகைகள் உண்டு. சமீபத்திய, பெரும்பாலான நாடுகளில் மின்னுற்பத்திக்காக பயன்படுத்தப்படுவது கொதிக்கும் தண்ணீர் அணுஉலை அல்லது 'Boiling water reactor' (BWR) எனப்படும் உலையே! ஜப்பானில் புகுசி மாவிலும் இதுதான் பயன்படுத் தப்படுகிறது! இது 1950களில் அமெரிக்காவின் ஜெனரல் எலெக்ட்ரிக் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

கொதிக்கும் தண்ணீர் அணு உலை (Boiling water reactor - BWR)

(இங்கிருக்கும் படத்தில் இடதுபக்கமிருக்கும் அணுஉலையில், யுரேனியம் வேதிப்பொருள் குழாய் போன்ற கம்பிகளுக்குள் அடைக்கப்பட்டு குளிர்ந்த நீருக்குள் மூழ்கவைக்கப்பட்டிருக்கும். யுரேனியத்திலிருந்து வெளியாகும் அணுசக்தியானது வெப்பத்தை உருவாக்கி, அதனைச் சுற்றியுள்ள குளிர்ந்தநீரை ஆவியாக்கும். அந்த ஆவியானது மின் உற்பத்தி செய்யும் டர்பைன் கருவியை இயக்கும். சுழலச்செய்து மின் உற்பத்தியை தொடங்கும், தூண்டும். டர்பைனை சுழலச் செய்தபின், அந்த நீராவியானது ஒரு 'கண்டென்சரின்' உதவியுடன் குளிர்விக்கப்பட்டு மீண்டும் நீராகிவிடும். இந்த நீரானது மீண்டும் யுரேனியம் இருக்கும் அணு உலைக்குள் செலுத்தப்பட்டும். இப்படியொரு சுழற்சியினால், யுரேனியத்திலிருந்து தொடர்ந்து 24மணி நேரமும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்!

இப்போ ஜப்பானின் புகுசிமாவில் இருக்கும் அணு உலைகளில் என்ன பிரச்சினை எனப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெப்பம் தாங்காமல் வெடித்துச் சிதறிய இரண்டு அணு உலைகளின் மேற்கூரைகள்!



அடிப்படையில் புகுசிமாவின் அணு உலைகள் வயதானவை. அதனால் அவை தொழிற்படவிடாமல் நிறுத்திவிட்டார்கள். வேலை செய்யாமல் நிறுத்தப்பட்டாலும், அணுஉலைகளுக்குள்ளே வேதியல் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டேதான் இருக்கும். இதனால் வெப்பமும், நீராவியும் அதிகரித்துக்கொண்டே இருக்கும்! யுரேனியத்தை பாதுகாக்கும் தண்ணீரின் அளவும் குறைந்துகொண்டே இருக்கும்! ஆகவே, அணு உலைகளை நிறுத்திய பின்னும் பல மாதங்கள் அவற்றை தொடர்ந்து தண்ணீர் சுழற்சிமூலம் குளிர்வித்துக்கொண்டே இருக்க வேண்டியது மிக மிக அவசியம்!

இல்லையென்றால், தண்ணீரின் அளவு குறைய குறைய, யுரேனியம் வெளியே வந்து, சிறுக சிறுக உருக ஆரம்பித்துவிடும்! அப்படி உருகினால் கதிரியக்கம், வெப்பம், நீராவியினால் உருவாகும்' அழுத்தம் எல்லாம் சேர்ந் து, அணு உலைகள் வெடித் துச் சிதறி, ஒரு பெரும் பிரளயத்தை ஏற்படுத் துவதோடு கதிரியக்கத்தை யும் சுற்றுச் சூழலுக்குள் பரப்பிவிடும்! கிட்டத் தட்ட ஒரு அணு குண்டு வெடிப்பதைப் போல!!



ஆனால், கடந்த 12.03.2011 அன்று ஜப்பானில் அணு உலைகள் வெடித்ததை தொலைக்காட்சிகளில் பார்த்திருப்பீர்கள். புகுசிமாவில் இருக்கும் அணுமின் உற்பத்தி நிலையத்திலுள்ள அணு உலைகளை பாதுகாக்கும் மேற்கூரைதான் அது!

அது ஏன் வெடித்தது என்றால் அணு உலையை நீர்சுழற்சி மூலம் குளிர்விக்க பயன்படுத்தப்படும் இயந்திரம் வேலை செய்ய மின்சாரம் கொடுக்கும் 'ஜெனரேட்டர்' செயலிழந்து போனமைதான்! அதுக்குக் காரணம், சுனாமி ஏற்பட்டவுடன் அணு மின் உற்பத்தி நிலையத்து தடுப்புச்சுவரை உடைத்து உள்ளே புகுந்த கடல்நீரானது அணு உலையை குளிர்விக்கும் நீரை சுழற்சிசெய்ய உதவும் 'ஜெனரேட்டரை' மூழ்கடித்து செயலிழக்கச் செய்துவிட்டது. அது செயலிழந் தபின் மின்கல உதவியுடன் மீண்டும் அந்த இயந்திரம் செயல்படுத்தப்பட்டாலும், சிறிது நேரத்துக்குப்பின் மின்கல மின்சாரம் தீர்ந்து போகவே, மீண்டும் குளிர்விக்கும் இயந்திரம் நின்றுபோனது!


இதற்கு மாற்று ஏற்பாடாக, அணு உலைகளை குளிர்விக்க கடல் நீரை உட்செலுத்தினார்கள். கடல் நீர் உட்செலுத்தப்பட்டதால், அணு உலையின் உள்ளே இருக்கும் நீர் கொதி த்து நீராவி அதிகமானது. அது மின்சார உற்பத்திக்கு பயன்படுத்தப்படாததால், அணு உலையினுள்ளே காற்ற ழுத்தம் அதி கமானது. இதனால் அணு உலை வெடித்துச் சிதறும் அபாயம் இருந்ததால், அந்த நீராவியை வெளியில் திறந்துவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சிறு அளவிலான கதிரியக்க வேதியற் பொருட்களான சீசியம் 137 மற்றும் அயோடின் 121 ஆகியவை கலந்த நீராவியை வெளியில் திறந்துவிட்ட பின்னும் அணு உலையினுள் காற்றழுத்தம் குறைந்தபாடில்லை. விளைவு காற்றழுத்தம் தாங்காமல் அணு உலையின் மேற்கூரை வெடித்துச் சிதறியது.

இந்த நீராவியை திறந்துவிடும் முன்னர்தான் மக்களின் பாதுகாப்பு கருதி அணுமின் உற்பத்தி நிலையத்தை சுற்றியுள்ள 12 மைல் சுற்றளவில் இருந்த மக்கள் வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டு, வெளியேறினார்கள்!

இதனையடுத்து, ஒரு நாள் கழித்து ஏற்பட்ட அதே பிரச்சினை அணு உலை 3-இலும் ஏற்படவே, அதனுடைய மேற்கூரையும் வெடித்துச் சிதறியது. இதுதான் நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்த,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இரண்டாவதாக வெடித்ததாக சொல்லப்பட்ட அணு உலை.

## எங்கே செல்லும் இந்த பாதை?

முக்கியமாக, இந்த அணு உலையின் கூரைகள் வெடித்ததற்கு, லேசாக உருகத்தொடங்கிவிட்ட யுரேனியம்தான் காரணம் என்று சொல்லப் படுகிறது. யுரேனியம் தண்ணீருக்குள் மூழ்கி யிருக்கும் வரைதான் அது பாதுகாப்பாக இருக்கும், அதிலிருந்து மின்சாரம் மட்டும் நமக்கு கிடைக்கும். ஆனால், தண்ணீரின் அளவு குறைந்து, மூழ்கியிருக்க வேண்டிய யுரேனியம் வெளியில் நீட்டிக்கொள்ளத் தொடங்கி விட்டால், அழிவுகாலம் தொடங்கிவிட்டது என்றுதான் அர்த்தம்!

ஏனெனில், தண்ணீருக்கு வெளியே வந்துவிட்டால் யுரேனியம் வேகமாக உருகத் தொடங்கிவிடும். அப்படி அது உருகினால், அதிலிருந்து வரும் வேதியல் மாற்றத்தினால் அணுவை விட சிறிய நுண்ணணுத் துகள்களும், அளவுக்கதிகமான வெப்பமும், அணுசக்தியும், கதிரியக்க வேதியற் பொருட்களும் வெளியேறும். ஒரு கட்டத்தில் அணுகுண்டு போல வெடித்துச்சிதறி, சுற்றியுள்ள பல கிலோமீட்டர் பரப்பளவிலுள்ள மனிதர்களுக்கு புற்றுநோய் உள்ளிட்ட எண்ணற்ற நோய்களையும் ஏற்படுத்தி, தாவரம், விலங்குகளையும் அழித்துவிடும்! அதுமட்டுமில்லாம, பாதிக்கப் பட்ட நிலப்பரப்பில் பல வருடங்களுக்கு தாவரங்கள் வளராது, மக்கள் புற்றுநோயினால் பல சந்ததிகளுக்கு தொடர்ந்து பாதிக்கப்படுவார்கள்!



லேசாக உருகத்தொடங்கிவிட்ட யுரேனியத்தை எப்படி மேலும் உருகாமல் பாதுகாப்பது என்பது குறித்து மிகுந்த சிரத்தையுடன் முயற்சி செய்து வருகிறார்கள். நாசா உள்ளிட்ட உலக மற்றும் ஜப்பானிய ஆய்வாளர்கள் அணுமின் உற்பத்தி அலுவலர்கள் பணியாளர்கள் எல்லோரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ அரியாலையூர் செ.செல்வதாஸன்.



# மறதி

இந்த நலன்புரி நிலையத்தாலை வந்ததுக்குப் பிறகு, ஞாபக சக்தி கொஞ்சம் குறைஞ்சுதான் போச்சுது.

ஒரு கிழமைக்கு முன்னம் கடிதம் வந்தது. இன்றைக்கு இருபத்தையாயிரம் காசு, நிவாரணம் தாறதெண்டு. ஏ. ஜி. ஏ கந்தோரில பின்னேரம் மூன்று மணிக்கு. நல்ல வேளை.. அம்மா ஞாபகப் படுத்தா விட்டால் விடிய எழும்பி, வெளிக்கிட்டு, கிளிநொச்சிக்கு வேலைக்குப் போயிருப்பன்..
இப்ப நேரம் பத்து மணி.. பின்னேரம் மூன்று மணிக்குத்தானே காசு குடுக்கிறது. ஒருக்கால் ரவுண் பக்கம் போயிற்று வருவமென்று புறப்பட்டேன். அம்மா தானும் வரப்போறன் எண்டா. அறுபது வயதாகுது. மோட்டச் சயிக்கில் எண்டால் தானும் ஒருக்கா வெளிக்கிடுவா அவசரம் அவசரமாக வெளிக்கிட்டா. ஏற்றிக்கொண்டு ரவுனுக்குப் போனோம். சம்பந்தன் கிளினிக்கில் பத்தரை மணிக்கு வாறதெண்டு சொன்ன டொக்டர், வரப் பதினொண்டு முப்பது மணி யாச்சுது. சோதிச்சு முடிய பன்னிரண்டு மணி. வெய்யில் உச்சந் தலையைப் பிளந்தது. புறுபுறுத்தால் அம்மா கோவிப்பா.. பொறுமை காத்தேன்.

மோட்டார் சயிக்கிளில ஏறியதும், "உவள் புஸ்பத்தையும் ஒருக்காப் பார்த்துக் கொண்டு போவம்.. அங்கை விடு" என்றா அம்மா..
நீ ஏலாதே புஸ்பம் என்ர தங்கச்சி. கொக்குவிலை இருவன் றோட்டில விடு. அந்தப் பக்கமாகத் திரும்பி கொக்குவிலுக்குப் போனோம். ஒரு மணித்தியாலம் வரை கதைச்சுக்கொண்டு நின்றோம்.
நல்லூர் திருவிழா கொடியேற்றம் அடுத்த நாள்.

இப்பவே அரசடி றோட்டில சனம். அதோட பந்தல் போடுற ஆக்கள் ஒரு பக்கம். வேகமாக றோட்டால மோட்டார் சயிக்கில் ஓட ஏலாது. இனிப் பின்னேரம் போக ஏ. ஜீ. ஏ கந்தோரில காசு தருவாங்களோ அல்லது கையெழுத்து வாங்கிப் போட்டு வங்கிக்கு அனுப்புவாங்களோ.....? என்று பலவாறாகச் சிந்தித்த வண்ணம், மோட்டார் சயிக்கிளைச் செலுத்திக் கொண்டிருந்தேன். இந்து மகளிர் கல்லூரி தாண்டிப் போக, றோட்டுக்குக் குறுக்காக வேகக் கட்டுப்பாட்டுக்காக மண்மேடு. கீழே பாதி கமுக மரத்தைப் போட்டு அதற்கு மேலாக மண்மேடு. எதிர்பார்க்கவே இல்லை வேகத்தைக் கட்டுப்படுத்தவும் முடியவில்லை. துள்ளி எகிறிக் குதித்து மோட்டார் சைக்கிள் கடந்தது. அம்மாவிடம் திட்டுத்தான் என்று திரும்பிப் பார்த்தேன். பின் சீற்றில் அம்மாவைக் காணவே இல்லை.. அவசரமாக கந்தர்மடச் சந்திக்கு முன்பதாக. முன்னுக்கு வந்த வாகனங்களையும் கவனிக்காது, திரும்பிப் போய்ப் பார்ப்போமென மோட்டார் சைக்கிளை அவசரமாகத் திருப்பினேன். வந்த பாதையில் எனது மோட்டார் சைக்கிள் வேகமாக விரைந்தது. படாரெனச் சிரிப்பு வந்தது. தான் புஸ்பத்தோடை ரெண்டு மூன்று நாளைக்கு நின்றுவிட்டு வரப் போகிறேன் என்று அம்மா அங்கேயே தங்கி விட்டது. அப்போதுதான் ஞாபகத்திற்கு வந்தது. இப்ப.. இந்த நலன்புரி நிலையத்திலிருந்து வந்த பின் ஞாபக சக்தி கொஞ்சம் குறைவுதான். இனி அம்மா நல்லூர்த் திருவிழா முடிஞ்சபின்தான் அநேகமாக வீட்டிற்கு வருவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சந்திரவதனா (ஜேர்மன்)



# இன்றைய காலகட்டத்தில் சாமத்தியச்சடங்கு அவசியந்தானா...?

புலம்பெயர் வாழ்வில் பெண்கள் முகம் கொடுக்கும் உளவியல் பிரச்சனைகளின் காரணிகளில் இந்தச் சாமத்தியச்சடங்கும் ஒன்றாக இருக்கிறது. ஒரு பெண் உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும், மிகவும் பாதிக்கப்படும் பருவம் அவள் பூப்பெய்தும் பருவம்தான். இது பற்றிய சரியான புரிந்துணர்வு புலத்தில் பல பெற்றோர்களிடம் இல்லை. இந்த நிலையில் நாம் இது பற்றிப் பேச வேண்டிய தொரு கட்டாயத்தில் இருக்கிறோம்.

இந்த 21ம் நூற்றாண்டில், இத்தனை தூரம் நாம் பல்வேறு துறைகளிலும் வளர்ந்து விட்ட நிலையில் சாமத்தியச் சடங்குகள் அவசியந் தானா? சாமத்தியச் சடங்கு எமது கலாசாரத்தில் ஏன் இடம் பிடித்துக் கொண்டது? என்பது போன்றதான கேள்விகளுக்கு மிகத் தெளிவான கருத்துக்களோ அல்லது விளக்கங்களோ எனக்கு இதுவரை சரியான முறையில் கிடைக்கவில்லை.

பல பெரியவர்களுடன் சாமத்தியச்சடங்கு பற்றிப் பேசிப் பார்த்த போது ஒவ்வொருவரும் சொன்ன அதற்கான காரணங்கள், ஒவ்வொரு விதமாகவே இருந்தன.

1. ஆண் பெண் பாகுபாடின்றி விளையாடித் திரிந்த சிறுமியை ஆண்களில் இருந்து பிரித்து வைப்பதற்காக....


2. 'எனது வீட்டில் ஒரு குமர் இருக்கிறாள். மணமகன்மார் பெண் கேட்டு வரலாம்' என்பதைத் தெரியப் படுத்துவதற்காக...

3. ருதுவானால்தான் அவள் முழுமையான பெண் என்ற உடல் ரீதியான அங்கீகாரம் சமூகத்திடம் இருந்து கிடைக்கும் என்பதற்காக....எனக் காரணங்கள் நீண்டன.

இப்படியான கருத்துக்களின் மத்தியில்,

'இவள் இனி உங்கள் பிள்ளை நீங்கள்தான் அவளைக்காக்க வேண்டும்' என்று சொல்லி ஊர் மக்களிடம் பிள்ளையை ஒப்படைப் பதற்காக... சாமத்தியச் சடங்கு நடக்கிறது. என்றும் ஒரு புலம் பெயர்ந்த பெரியவர் சொன்னார்.

இப்படியானதொரு கருத்தைக் கேட்க...., சிரிப்பாக இல்லை....? கற்றவர் ஆழ்ந்து ஆராய்ந்து ஆக்க பூர்வமானதொரு கருத்தை ஆணித்தரமாகத் தருவார் என்று தான் எதிர் பார்த்தேன். கருத்துக்கள் தருவது அவரவர் சுதந்திரம். ஆனால், எம்மத்தியில் உள்ள கற்றவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான உப்புச் சப்பற்ற கருத்துக்களைத் தருவது சமூகத்தை, எமது கலாசாரத்தை, எமது பண்பாட்டை நாமே அவமானப் படுத்துவதற்குச் சமானமாகிறது.

குறை பிடிக்கவும், குற்றம் பிடிக்கவும், பருவம் பார்த்துத் தருணம் தேடி பெண்ணைச் சீரழிக்கவுமே சமூகத்துள் ஒரு கழுகுக் கூட்டம் காத்திருக்கும். ஊரவர்தான் அப்படியென்றால் உள்ளுக்குள் அதைவிடக் கேவலம்.

அனேகமான பாலியல் வன்முறைகளும், பாலியல் துஷ்பிரயோகங்களும் வீட்டுக்குள்தான் நடக்கின்றன. மாமாவால், சித்தப்பாவால், அக்காவின் கணவனால், அப்பாவின் நெருங்கிய நண்பனால்.... இப்படித்தான் பெரும்பான்மையான பாலியல் வன்முறைகளும், பாலியல் துர்ப்பிரயோகங்களும் அரங்கேறியுள்ளன. இன்னும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.



வெளிநாட்டவர் மத்தியில் ஓரளவுக்காவது இவை வெளிச்சத்துக்கு வருகின்றன. ஆனால் எம்மவரிடையே இவை குமுறல்களாகவும், கோபங்களாகவும் ஆற்றாமையாகவும் பெண்களுக்குள் அடங்கிக் கிடக்கின்றன.

இவைகளை வெளியில் சொல்லி கலாச்சாரம், பண்பாடு, என்று வாயளவில் உச்சரித்து, மனதுள் போலியாக வாழும் மனிதமல்லாதவர்களின் முகத்திரைகளைக் கிழித்தெறிய எம் பெண்களிடம் தைரியம் இல்லை. வெளியில் தெரிந்தால் சமூகமும், அதன் கலாச்சாரமும், அதன் பண்பாடும், பாதிக்கப்பட்ட பெண்ணையே பாழுங் கிணற்றில் தள்ளி விடும் என்ற பயம்.

இந்த நிலையில் நன்கு யோசித்துப் பாருங்கள்.

ஒரு பெண் தன்னைக் காத்துக் கொள்ள எமது கலாச்சாரமும் பண்பாடும் உதவுகிறதா? அல்லது விழிப்புணர்வும் தைரியமும் உதவுகிறதா என்று.

எமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் காத்து, எமது முகங்களை அழிய விடாது காப்பது ஆண், பெண் இருபாலாரதும் கடமை. அதற்காகப் போலிகளை, கலாச்சாரம், பண்பாடு என்று பொய்யாகப் பெயர் சூட்டி பெண்களில் திணித்து அவர்களை அடக்க நினைப்பது மடமை. இந்தப் பொய்களின் வேசம் புரியாது, போலிக் கலாச்சாரங்களில் தம்மைப் புதைத்துக் கொள்வது எம் பெண்களின் அறியாமை.

முதலில் எமது பெண்பிள்ளைகளிடம், எந்தப் பிரச்சினையையும் பெற்றோருடன் பேசி, தம்மைநெருங்கும் துட்டர்களிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ளும் தைரியம் வர வேண்டும். பெற்றோர்களுடன் அவர்கள் இப்படியான விடயங்களை இயல்பாகப் பேசும் துணிவு ஏற்படும் படியாகப் பெற்றோர் நடந்து கொள்ள வேண்டும்.

எமது முன்னோர்கள் வரையறுத்த அனேகமான கோட்பாடுகள் அர்த்தமுள்ள, அவசியமான விடயங்களுக்காகவே இருந்தன. அவை ஒவ்வொன்றுக்குமான கரு ஆரோக்கியமானதாகவும் அழகியதாகவும் இருந்தன.

ஆனால், நீண்ட கால ஓட்டத்தில், காரணங்கள் திரிபு பட்டது மட்டு மல்லாது காரியங்களும் ஆணாதிக்க மேலோங்கலில் மிகுந்ததொரு சுயநல நோக்குடன் கட்டாயமாகத் திரிக்கப்பட்டு, இன்றைய கால கட்டத்தில் ஏன்? எதற்கு? என்ற சிந்தனைகளெதுவுமின்றி, உண்மையான, தேவையான விடயங்கள் புறக்கணிக்கப்பட்டு, கலாச்சாரம், பண்பாடு என்ற போர்வைக்குள் பொய்யான விடயங்கள் தொடர்கின்றன.

வருத்தமான விடயம் என்னவெனில் அனேகமான பெண்களுக்கு இந்தப் பொய்யான திணிப்புகளின் போலி வடிவம் புரிவதில்லை. தாம் போலிக் கலாசாரத்தில் பொசுங்கிக் கொண்டிருப்பது பற்றி அவர்கள் எந்த வித பிரக்ஞையும் கொள்வதுமில்லை.

உண்மையில் சாமத்தியச் சடங்கை கோலாகலமாக 'ஹோல்' (hall) எடுத்து விழாவாகச் செய்யும் அனேகமான பெற்றோருக்கு சாமத்தியச் சடங்கு செய்வதற்கான காரணம் என்னவென்றே தெரியாது.

1. வீடியோ கமராவில் எடுப்பதற்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. என் வீட்டுச் சாமத்திய வீடு மற்றையவர் வீட்டை விடப்பெரிதாக நடந்ததெனக் காட்டுவதற்கும்,

3. இப்படிப் பெரிதாகச் செய்யாவிட்டால் என்ன நினைப்பார்கள் என்பதான போலி கௌரவத்துக்கும்,

4. கொடுத்த மொய்யை திரும்பப் பெற்றுக் கடன் கழிப்பதற்கும்....

இன்னும் பல காரணங்களைக் காரணமாகக் கொண்டுதான், பூப்படைந்த பெண்ணைக் காட்சிப் பொருளாக வைத்து இன்று புலம்பெயர் மண்ணில் பெரும்பாலான சாமத்தியச் சடங்குகள் நடைபெறுகின்றன. இதற்கு வெறுமனே கலாசாரம், பண்பாடு என்று பொலி முலாம் பூசப்படுகிறது. அவ்வளவுதான்.

ருதுவாகும் பருவத்தில், ஒரு பெண் பிள்ளையின் உளத்திலும், உடலிலும் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டு அவள் ஒரு அசாதாரண நிலைக்குத் தள்ளப் படுகிறாள். இந்த அசாதாரண நிலை அவள் மனதை மேலும் குழப்பாத வகையில், பெற்றோர்கள் 'இது சாதாரண விடயந்தான்' என்பதை அவளுக்கு விளங்கப் படுத்த வேண்டும். தாழ்வு மனப்பான்மையோ தற்பயமோ அவளுக்கு ஏற்படாத வகையில் அவளுடன் நிறையப் பேச வேண்டும். ஆதரவுடன் நடக்க வேண்டும் என்று ஜேர்மனிய மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

இந்த நேரத்திலான அவளின் உடலின் அதீத வளர்ச்சியினால் அவள் தோள்மூட்டுகளிலும், முதுகுப் பகுதியிலும் ஏற்படும் உபாதைகளின் தன்மையை உணர்ந்து அவளுக்குத் தாராளமான ஓய்வைக் கொடுக்க வேண்டும். அவளின் தோள் மூட்டுக்களும், முதுகும் வலுப்பெறக் கூடிய வகையில் சில உடற் பயிற்சிகளை அவள் செய்ய வழி சமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும்... ஜேர்மனியப் பாடசாலை உளவியல் ஆசிரியர்கள் சொல்கிறார்கள்.

பூப்படையும் நிகழ்வை சாதாரண நிகழ்வாக எடுக்காமல் இப்படிப் பெருவிழாவாகக் கொண்டாடிப் பெரிது படுத்தும் போது, அது அந்தப் பெண்பிள்ளைகளின் மனதில் பல்வேறு பட்ட சலனங்களையும், உளவியற் தாக்கங்களையும் ஏற்படுத்தி அந்தப் பிள்ளைகளைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்ல வழி கோலுகின்றது.

ஆனால் , இங்கே புலத்தில் என்ன நடைமுறைப் படுத்தப் படுகிறது? பல அத்தியாவசியத் தேவைகளை பெண்பிள்ளைகள் எதிர் நோக்கிக் கொண்டிருக்கும். அந்த நேரத்தில், அத்தனையையும் விடுத்து வெறுமனே சாமத்தியச் சடங்கு என்ற பெருவிழா நடாத்தப் படுகிறது. இப்படிச் செய்வதால் அந்தப் பெண்பிள்ளைகள் என்ன பயனைப் பெறுகிறார்கள்?

இதைச் சண்டையாகவோ, ஆண் பெண் பாலாருக்கிடையிலான விவாதமாகவோ எண்ணாமல் யதார்த்தமாக எல்லாப் பெற்றோர்களும் சிந்தித்துப் பாருங்கள்.

ஜேர்மனிய மருத்துவர்கள் கூறிய இந்த ஆதரவுகள் பெற்றோர்களிடமிருந்து கிடைக்காத பட்சத்தில் தான் பெண்பிள்ளைகள் மற்றவர்கள்மேல் கோபப்படுபவர்களாகவும், எரிச்சல் படுபவர்களாகவும் காணப்படுகிறார்கள். அல்லாதுவிடில் 'அமுமூஞ்சி' களாகி விடுகிறார்கள்.

இந்த உடல் ரீதியான மாறுதல்கள் ஆண்களிடமும் ஏற்படுகிறதுதான். அது சற்று வேறுபாடானதாக இருந்தாலும் அவர்களுக்கும் இந்த நேரத்தில் அன்பு, ஆறுதல், அரவணைப்பு என்பன தேவைப் படுகின்றன. அது கிடைக்காத பட்சத்தில்தான் அவர்களும் எரிச்சல், கோபம், மௌனம் என்பவற்றிற்கு ஆளாகிறார்கள். ஆனால், ஆண் பிள்ளைகளுக்கு வெளியில் செல்லவும் அவர்கள் விரும்பியதைச் செய்யவும் தாராளமான சுதந்திரம் இருப்பதால் பெண்பிள்ளைகளிடம் ஏற்படுமளவுக்கு பாதிப்பு ஆண்பிள்ளைகளிடம் ஏற்படுவதில்லை.

அதனால் முக்கியமாக, கட்டுப்பாடு என்ற பெயரில் பெண்பிள்ளைகளைக் கட்டி வைக்கும் எமது சமூக அமைப்பில் வளர்ந்து கொண்டிருக்கும் எமது பெண்பிள்ளைகளுக்கு இந்த சமயத்தில் பெற்றோரினது முழு ஆதரவும் தேவை என்பதை தமிழ்ப் பெற்றோர்கள் மறந்து விடவோ அலட்சியப் படுத்தி விடவோ கூடாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தானமா வடிவேலுவா?



சென்ற ஆண்டு வரை நகைச்சுவையில் 'வடிவேலுவா விவேக்கா' முன்னணியில் என்றிருந்த நிலையில் இப்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. வடிவேலு அப்படியே இருக்கிறார். ஆனால், விவேக் இடத்தைப் பிடித்திருக்கிறார் சந்தானம்.

இன்றுவரை தமிழ் திரையுலகில் அதிக சம்பளம் வாங்கும் நகைச்சுவை நடிகர் வடிவேலுதான். ஒரு நாள் சம்பளமாக ஏழிலிருந்து பத்து லட்சம் ரூபாய் பெறுகின்றார்.

அடுத்த இடத்துக்கு அதிரடியாக வந்துவிட்டார் சந்தானம். இவரது சமீபகாலப் படங்களில் கதாநாயகனுக்கு இணையாகப் பேசப்படுவதால் சம்பளத்தை லட்சமாக உயர்த்திவிட்டார்.

வடிவேலு இந்த இடத்தை அடைய பல ஆண்டுகள் ஆனது. சந்தானமோ சில ஆண்டு களிலேயே இவ்வளவு லட்சத்தை எட்டிவிட்டார். அதோடு வடிவேலுவை விட இப்போது சந்தானம் தான் அதிகப்படங்களில் நடித்து வருகிறாராம்.

# முதன்மையான 10 உலக மொழிகள்

உலகின் முதல் 10 மொழிகளைப் பற்றிய தகவல் இது. மொழி பேசும் மக்கள் எண்ணிக்கையை அடிப் படையாக வைத்துப்பார்த்தால் சீனம் தான் முதல் இடத்தில் இருக்க வேண்டும். ஆனால், உலக அளவில் வணிகம், அறிவியல், அரசியல் என்று பல துறைகளில் செல்வாக்கு செலுத்துகிற மொழிகள் என்கிற அடிப்படையில் பத்து மொழிகள் இவ்வரிசையில் முதன்மையானவையாக கணிக்கப்பட் டுள்ளது.

1.ஆங்கிலம். 2.பிரெஞ்சு. 3.எஸ்பான்யோல் (Spanish) 4.உருசிய மொழி. 5.அரபு. 6.சீனம் 7.டொயிட்ச் (German) 8.ஜப்பானியமொழி 9.போர்த்துகீசியமொழி 10.உருது / இந்தி. பேசும் மக்கள் எண்ணிக்கையில் மட்டும் தமிழ் 18ஆவது இடத்தில் இருக்கிறது. தமிழ் உலக மொழியாவதற்கான வாய்ப்பு அடுத்த பல நூற்றுண்டுகளுக்குத் துளியும் இல்லை எனக்கூறப்படுகின்றது! எனவே இந்தப் பட்டியலில் தமிழுக்கு என்ன இடம் என்று கவலைப்படத் தேவையில்லை. தகுதிச் சுற்றுக்கே நமக்கு இடம் இல்லை. உலக அளவில தமிழ் எந்த ஒரு துறைக்கான மொழியாகவும் இல்லை. ஒரு இனம் பேசும் மொழியாக மட்டும் தான் இருக்கின்றது. திரைப்படம், இலக்கியம், ஆன்மிகம், சமையல், சோதிடம் என்று ஒரு மிகச்சிறிய வட்டத்துக்குள்ள தான் தமிழ் மொழி இருக்கின்றது. இப்போது ஆறரைக் கோடிக்குமேல் தமிழாகள் வாழும் தமிழ்நாட்டில் தமிழ் முதல் மொழி என்ற நிலை வந்தாலே பெரிய விடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அம்பை

# காட்டில் ஒரு மான்



அம்பை என்கிற சி.எஸ்.லக்ஷ்மி தமிழின் சிறந்த பெண் படைப்பாளிகளுள் ஒருவர். 1960களின் பிற்பகுதியில் எழுதத் தொடங்கினார். பெண் நிலை நோக்கினை வெளிப்படுத்தும் வகைமையிலான தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடி. பல பெண் படைப்பாளிகள் தொடச் சிரமப்படும் விடயங்களை சர்வ சாதரணமாய் தொட்டுச் சென்றவர். உறவு, காதல், திருமணம், அரசியல், இசை என்று பல்வேறு பரிமாணங்களைத் தொட்டவர். பெண்களின் வாழ்க்கையை அதுவும் சுயசிந்தனை கொண்ட படித்த பெண்களை மிக இயல்பாய் படைத்தவர். தமிழகத்தின் எல்லை கடந்த நிலப்பகுதிகளையும் களமாகக் கொண்ட இவரது கதைகளில் பெண்களின் உறவுச் சிக்கல்கள் பிரச்சினைகள், குழப்பங்கள், கோபதாபங்கள், சமரசங்கள் யாவும் கிண்டலான தொனியில் கலாபூர்வமாக வெளிப்படுகின்றன.

அந்த இரவுகளை மறப்பது கடினம். கதை கேட்ட இரவுகள். தங்கம் அத்தைதான் கதை சொல்வாள். காக்கா, நரி, முயல், ஆமைகதைகள் இல்லை. அவளே இட்டுக் கட்டியவை. கவிதைத்துண்டுகள் போல சில. முடிவில்லா பாட்டுக்கள் போல சில. ஆரம்பம், நடு, முடிவு என்றில்லாமல் பலவாறு விரியும் கதைகள். சில சமயம், இரவுகளில் பல தோற்றங்களை மனதில் உண்டாக்கி விடுவாள். அசுர்கள், கடவுளர்கள் கூட அவள் கதைகளில் மாறி விடுவார்கள்.மாந்தரையைப்பற்றி உருக்கமாக சொல்வாள். சூர்ப்பனகை, தாடகை எல்லோரும் அரக்கிகளாக இல்லாமல் உணர்ச்சிகளும், உத்வேகங்களும் கொண்டவர்களாக உருமாறுவார்கள். காப்பியங்களின் பக்கங்களில் ஒட்டிக்கொண்டவர்களை வெளியே கொண்டு வருவாள். சிறகொடிந்த பறவைகளை வருடும் இதயத்தோடு அவர்களை வரைவாள் வார்த்தைகளில். இரவு நேரமா, அந்த பழைய வீட்டுக்கூடமா, கூடப்படுத்த சித்தி மாமா குழந்தைகளின் நெருக்கமா என்னவென்று தெரியவில்லை. அந்த கதைகள் வண்டின் ரீங்காரமாய் மனதில் ஒரு மூலையில் ஒலியுடன் சுழன்றவாறிருக்கின்றன.

தங்கம் அத்தை அந்த பழைய தூண்களும் நடுக்கூடமும் உள்ள வீட்டில் பல பிம்பங்களில் தெரிகிறாள். பெரிய மரக்கதவின் மேல் சாய்ந் தவாறு. அகல் விளக்கை புடவை தலைப்பால் மறைத்தபடி ஏந்தி வந்து புறையில் வைத்தபடி. தன் கணவன் ஏகாம்பரத்துக்குச் சோறிட்டவாறு. கிணற்றுச் சுவரில் ஒரு காலை வைத்து கயிற்றை இழுத்துக் கொண்டு. செடிகளுக்கு உரமிட்ட வாறு.

தங்கம் அத்தை அழகுக் கறுப்பு. நீவி விட்டாற் போல் ஒரு சுருக்கமும் இல்லாத முகம்., முடியில் நிறைய வெள்ளி. அத்தை வீட்டில் காலால் அழுத்தி இயக்கும் அந்தக் கால ஹார்மோனியம் உண்டு. அத்தைதான் வாசிப்பாள். தேவாரப் பாடல்களிலிருந்து வதனமேசந்திர பிம்பமோ, வண்ணான் வந்தானே வரை மெல்லப்பாடியவாறு வாசிப்பாள். கறுப்பு அலகுகள் போல நீள விரல்கள் ஹார்மோனியக்கட்டைகளின் மேல் கறுத்தப்பட்டாம் பூச்சிகள் மாதிரிப் பறக்கும்.

தங்கம் அத்தையைச்சுற்றி ஒரு மர்மஒடு இருந்தது. மற்றவர்கள் அவளைப்பார்க்கும் கனிவிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைத் தடவித் தருவதிலும், ஈரம்கசியும் கண்களிலும் அனுதாபம் இருந்தது. ஏகாம்பர மாமாவுக்கு இன்னொரு மனைவியும் இருந்தாள். அத்தையை அவர் பூ மாதிரி அணுகுவார். அவர் அத்தையை டி போட்டு விளித்து யாரும் கேட்டதில்லை. தங்கம்மா என்று கூப்பிடுவார். அப்படியும் அத்தை ஒரு புகைத்திரைக்குப்பின் தூர நிற்பவள் போல் தென்பட்டாள். முத்து மாமாவின் பெண் வள்ளிதான் இந்த மரமத்தை உடைத்தாள். அவள் கண்டுபிடித்தது புரிந்தும் புரியாமலும் இருந்தது. வள்ளியின் அம்மாவின் கூற்றுப்படி அத்தை பூக்கவே இல்லையாம்.

"அப்படின்னா?" என்று எங்களில் பலர் கேட்டோம்.

வள்ளி தாவணி போட்டவள். "அப்படின்னா அவங்க பெரியவளே ஆகலை" என்றாள்.

"முடியெல்லாம் நெறய வெளுத்திருக்கே?"

"அது வேற"

அதன்பின் அத்தையின் உடம்பை உற்றுக் கவனித்தோம். பூக்காத உடம்பு எப்படி இருக்கும் என்று ஆராய்ந்தோம். அவள் உடம்பு எவ்வகையில் பூரணமடையவில்லை என்று தெரியவில்லை. ஈரத்துணியுடன் அத்தை குளித்துவிட்டு வரும்போது அவள் எல்லோரையும் போலத்தான் தெரிந்தாள். முடிச்சிட்ட சிவப்பு ரவிக்கையும், பச்சைப் புடவையும், முடிந்த தலையுமாய் அவள் நிற்கும்போது அவள் தோற்றம் வித்தியாசமாய்த் தெரியவில்லை. பறவையின் உடைந்த சிறகு போல, அது வெளிப்படையாக தெரியாத பொக்கையா என்று புரியவில்லை.

ஒரு மாலை பட்டுபோன பெரிய மரத்தைத் தோட்டத்தில் வெட்டினார்கள். கோடாலியின் கடைசி வெட்டில் அது சரசரவென்று இலைகளின் ஒலியோடு மளுக்கென்று சாய்ந்தது. குறுக்கே வெட்டியபோது உள்ளே வெறும் ஒட்டை. வள்ளி இடுப்பில் இடித்து, அதுதான் பொக்கை என்றாள். பிளவு பட்டு, தன்னை முழுவதுமாய் வெளிப்படுத்திக் கொண்டு, உள்ளே ஒன்றுமில்லா மல்வான் நோக்கிக் கிடந்த மரத்துடன் அத்தையின் மினுக்கும் கரிய மேனியை ஒப்பிட முடியவில்லை.

எந்த ரகசியத்தை அந்த மேனி ஒளித்திருந்தது? அவள் உடம்பு எவ்வகையில் வித்தியாசப் பட்டது? வெய்யில் காலத்தில் அத்தை, மத்தியான வேளைகளில் ரவிக்கையை கழற்றிவிட்டு, சாமான்கள் வைக்கும் அறையில் படுப்பாள். அவளருகில் போய்ப் படுத்து, ரவிக்கையின் இறுக்கத்தினின்றும் விடுபட்ட மார்பில் தலையை வைத்து ஒண்டிக் கொள்ளும் போது அவள் மென்மையாக அணைத்துக்கொள்வாள். மார்பு, இடை, கரங்களில் பத்திரப்பட்டுப் போகும் போது எது பொக்கை என்று புரியவில்லை. மிதமான கட்டுடம்பு அவளுடையது. ரசங்கள் ஊறும் உடம்புடையவளாகப்பட்டாள். சாறு கனியும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழத்தைப்போல் ஒரு ஜீவ ஊற்று ஓடியது அவள் உடம்பில். அதன் உயிரப்பிக்கும் துளிகள் எங்கள் மேனியில் பலமுறை சொட்டியது. தொடலில், வருடலில், எண்ணை தேய்க்கும் போது படும் அழுத்தத்தில், அவள் உடம்பிலிருந்து கரை புரண்டு வரும் ஆற்றைப்போல் உயிர் வேகம் தாக்கியது. அவள் கைபட்டால் தான் மாட்டுக் குப் பால் சுரந்தது. அவள் நட்ட விதைகள் முளை விட்டன. அவளுடைய கை ராசியானது என்பாள் அம்மா. தங்கச்சி பிறந்தபோது அத்தை வந்திருந் தாள். அக்கா, என் பக்கத்தில் இருக்கா. என்னைத் தொட்டுக்கிட்டே இரு. அப்பத்தான் எனக்கு வலி தெரியாது என்று அம்மா முனகினாள், அறையை விட்டு நாங்கள் வெளியேற்றப்பட்டபோது. கத வருகே வந்து திரும்பிப் பார்த்தபோது தங்கமத் தை அம்மாவின் உப்பிய வயிற்றை மெல்ல வருடியபடி இருந்தாள்.

ஒன்றும் ஆகாது, பயப்படாதே என்று மெல்லக் கூறினாள்.

"அடியக்கா, ஒனக்கொரு" என்று முடிக்காமல் விம்மினாள் அம்மா.

"எனக்கென்ன ? ராசாத்தியாட்டம். என் வீடெல் லாம் புள்ளைங்க" என்றாள் அத்தை. ஏகாம்பர மாமாவின் இளைய மனைவிக்கு ஏழு குழந் தைகள்.

"இப்படி ஒடம்பு திறக்காம" என்று மேலும் விசும் பினாள் அம்மா.

"ஏன், என் ஒடம்புக்கு என்ன ? வேளாவேளைக்குப் பசிக்கலையா? தூக்கமில்லையா? எல்லா ஒடம் புக்கும் உள்ள சீரு இதுக்கும் இருக்கு. அடிபட்டா வலிக்குது. ரத்தம் கட்டுது. புண்ணு பழுத்தா சீ வடியுது. சோறு திண்ணா செரிக்குது. வேற என்ன வேணும்?" என்றாள் அத்தை.

அம்மா அவள் கையைப் பற்றி கன்னத்தில் வைத்துக்கொண்டாள்.

ஒன் உடம்பைப் போட்டு ரணகளமாக்கி என்று அந்த கையை பற்றியவாறு அரற்றினாள்.

அத்தையின் உடம்பில் ஏறாத மருந்தில்லை என்று வள்ளியின் அம்மா வள்ளியிடம் சொல்லியிருந் தாள். ஊரில் எந்தப் புது வைத்தியன் வந்தாலும் அவன் குழைத்த மருந்து அத்தைக்கு உண்டு. இங் கிலீஸ் வைத்தியமும் அத்தைக்குச் செய்தார் களாம். சில சமயம் மருந்துகளைச் சாப்பிட்டு விட்டு அத்தை அப்படி ஒரு தூக்கம் தூங்கு வாளாம். வேப்பிலையும், உடுக்குமாய் சில மாதங் கள் பூசைகள் செய்தார்களாம். திடீரென்று பயந் தால் ஏதாவது நேரலாம் என்று ஒரு முன்னிரவு நேரம் அத்தை பின் பக்கம் போன போது கரிய போர்வை போர்த்திய உருவம் ஒன்று அவள் மேல் பாய்ந்ததாம். வீரிட்ட அத்தை துணி துவைக்கும் கல்லில் தலை இடிக்க விழுந்து விட் டாளாம். அவள் நெற்றி முனையில் இன்னமும் அதன் வடு இருந்தது. அடுத்த வைத்தியன் வந்த போது, என்னை விட்டுடுங்க. என்னை விட்டு டுங்க என்று கதறினாளாம் அத்தை. ஏகாம்பர மாமாவுக்கு வேறு பெண் பாரத்தபோது அத்தை அன்றிரவு அரளி விதைகளை அரைத்துக் குடித்துவிட்டா ளாம். முறிமருந்து தந்து எப்படியோ பிழைக் கவைத்தார்களாம். உன் மனசு நோக எனக்கு எதுவும் வேண்டாம் என்று மாமா கண்கலங் கினாராம். அதன் பின் அத்தையே அவருக்கு ஒரு பெண்ணைப் பார்த்தாள். அப்படித்தான் செங்க மலம் அந்த வீட்டுக்கு வந்தாள். எல்லாம் வள்ளி சேகரித்த தகவல்கள்.

அத்தை தன்கையை அம்மாவின் பிடியிலிருந்து விலக்காமல் இன்னொரு கையால் அம்மாவின் தலையை வருடினாள். "வுடு, வுடு. எல்லாத் தையும் வுடு. புள்ளைபொறக்கற நேரத்தில ஏன் கதையை எடுக்கிற?" என்றாள். அன்றிரவுதான் தங்கச்சி பிறந்தாள். அதன் பின் ஊருக்கு ஒரு முறை போனபோதுதான் அத்தை அந்தக்கதை யைச் சொன்னாள்.

மழைக்காலம். இரவு நேரம். கூடத்தின் ஒரு பக்கம் ஜமக்காளத்தை விரித்து, எண்ணைத்தலைப் பட்டு கரைபடிந்த தலையணை உரைகளோடு இருந்த சில தலையணைகளை போட்டாகி விட்டது. சில தலையணைகளுக்கு உரையில்லை. அழுத்தமான வண்ணங்கள் கூடிய கெட்டித்துணியில் பஞ்சு அடைத்திருந்தது. ஆங்காங்கே பஞ்சு முடிச்சிட் டுக் கொண்டிருந்தது. அவை நிதம் உபயோகத் திலிருக்கும் தலையணைகள் அல்ல. விருந்தினர் வந்தால், குழந்தைகளுக்குத் தர அவை. நாள் முழுவதும் விளையாடிவிட்டு, வயிறுமுட்டச் சாப்பிட்டுவிட்டு படுத்தவுடன் உறங்கிவிடும் குழந்தைகளுக்கு முடிச்சுகள் உறைக்கவா போகி றது ?

சமையலறை அலம்பி விடும் ஓசை கேட்டது. சொம்பின் "ணங்" கென்ற சத்தமும், கதவின் கிரீச்சும், தென்னந் துடைப்பம் அதன் பின் வைக்கப்படும் சொத்தென்ற ஒலியும் கேட்டது. தகர டப்பா கிரீச்சிட்டது. கோலப்பொடி டப்பா. அடுப்பில் கோலம் ஏறும். அதன் பின் சமயலறைக் கதவை அடைத்துவிட்டுக் கூடத்தின் வழியாகத் தான் அத்தை வருவாள். யாரும் தூங்கவில்லை. காத்திருந்தனர்.

அத்தை அருகில் வந்ததும், சோமுதான் ஆரம்பித் தான்.

"அத்தே, கதை சொல்லேன்" அத்தே

"தூங்கல நீங்க எல்லாம்?"

நின்று பார்த்துவிட்டு, அருகில் வந்து அமர்ந்தாள். காமாட்சியும் சோமுவும் மெல்ல ஊர்ந்து வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் இரு தொடைகளிலும் தலை வைத்துப் படுத்து அண்ணாந்து அவளைப் பார்த்தனர். மற்றவர்கள் தலையணைகளில் கைகளை ஊன்றிக் கொண்டனர்.

அத்தை களைத்திருந்தாள். நெற்றியில் வேர்வை மின்னியது. கண்களை மூடிக்கொண்டு யோசித் தாள்.

"அது ஒரு பெரிய காடு...." என்று ஆரம்பித்தாள்.

"அந்தக் காட்டில் எல்லா மிருகங்களும் சந்தோச மாய் இருந்தது. காட்டில பழ மரமெல்லாம் நெறய இருந்தது. ஒரு சின்ன ஆறு ஓடிச்சு ஒரு பக்கம். தாகம் எடுத்துச்சின்னா அங்க போயி எல்லாம் தண்ணி குடிக்கும். மிருகங் களுக்கு எல்லாம் என்ன வெல்லாம் வேணுமோ எல்லாம் அந்த காட்டில சரியா இருந்தது. அந்தக் காட் டில வேடன் பயமில்லை. திடீர்னுட்டு அம்பு குத்துமோ, உசிருபோகு மோன்னு பயமேயில்லா மதிரிஞ் சிச்சுங்க அந்த மிருகங்க எல் லாம். எல்லா காடு மாதிரியும் அங்கயும் காட்டுத்தீ, வெள மனுசங்க வந்து மரம் வெட் டறது, பழம் பறிக்கிறது, திடீர்னு ஒரு ஆளு வந்து பட்சிங்கள சுடுறது, ஓடுற பன்னியை அடிக்கிறது அதெல்லாம் இல்லாம இல்ல. இருந்தாலும், அங்க இருந்த மிருகங்க ளுக்கும் பட்சிகளுக்கும் பழகிப் போன காடு அது. ஆந்தை எந்த மரத்தில உக் காரும், ராத்திரி சத்தமே இல்லாமகாடு கிடக்கிற போது எப்படி அது கத்தும், எந்த கல்லுமேல ஒக்காந்து கிட்டு தவளை திடான்னுட்டு களகளன்னு தண்ணி குடிக்கிற மாதிரி சத்தம் போடும், எந்த இடத்தில மயிலாடும் என்று எல்லாம் தெரிஞ்சு போன காடு.



இப்படி இருக்கிறப்போ ஒரு மான் கூட்டம் ஒரு நாள் தண்ணி குடிக்கப் போச்சுது. அதுல ஒரு மான் தண்ணி வழியா போனப்போ விலகிப் போயிடிச்சு. திடீர்னு அது வேற காட்டில இருந் திச்சி. பாதையெல்லாம் இல்லாத காடு. மரங் கள்ல எல்லாம் அம்பு பாஞ்ச குறி இருந்தது. அந் தக் காட்டில ஒரு அருவி ஜோன்னு கொட் டிச்சு. யாருமே இல்லாத காடு மாதிரி விரிச்சோன் னுட்டு இருந்தது. மானுக்கு ஒடம்பு வெட வெடன்னு நடுங்கிச்சி. இங்கயும் அங்கயும் அது ஓடிச்சி. அந்த பழகின காடு மாதிரி இது இல்ல யேன்னுட்டு அலறிட்டே துள்ளித் துள்ளிக் காடெல்லாம் திரிஞ்சிச்சு. ராத்திரியாச்சு. மானுக்கு பயம் தாங்கல. அருவிச் சத்தம் அதை பயமுறுத்திச்சு. தூரத்தில ஒரு வேடன் நெருப்பை மூட்டி அவன் அடிச்ச மிருகத்தை சுட்டுத் தின் னுட்டு இருந்தான். அந்த நெருப்புப்பொறி மான் கண்ணுக்குப் பட்டது. அது ஒளிஞ்சிக் கிட்டது. தனியாக் காட்டைச் சுத்திச் சுத்திவந்து களைச்சிப் போய் அது உக்காந்துகிட்டது.

இப்படி நெறய நாளு அது திரிஞ்சுது. ஒரு நா ராத் திரி பௌர்ணமி. நெலா வெளிச்சம் காட்டில அடிச்சது. அருவி நெலா வெளச்சத்தை பூசிக் கிட்டு வேற மாதிரி ரூபத்தில இருந்திச்சு. பயமு றுத்தாத ரூபம். நெலா வெளிச்சம் மெத்து மெத் துன்னுட்டு எல்லாத்தையும் தொட்டுது. திடீர்னு மந்திரக்கோல் பட்டமாதிரி அந்த மானுக்கு பயமெல்லாம் போயிடிச்சு. அந்தக் காடு அதுக்கு பிடிச்சுப் போயிடிச்சு. காட்டோட மூலை முடிக்கெல்லாம் அதுக்கு புரிஞ்சிப் போயிட்டது. வேறு காடா யிருந்தாலும் இந்தக் காட்டிலேயும் எல்லாம் இருந் துச்சு. அருவி இருந்துச்சு, மரம், செடி எல்லாம் இருந்தது. மொள்ள மொள்ள மிருகங்க பட்சிக எல்லாம் அது கண் ணுல பட்டுது. தேன் கூடு மரத்தில தொங்கறது தெரிஞ் சிது. நல்லா பச்சப்பசே லுன்னு புல்லு தெரிஞ்சிது. அந்த புதுக்காட்டோட ரகசி யமெல்லாம் அந்த மானுக்கு புரிஞ்சிடிச்சு. அதுக்கப்புறமா, பயமில்லாம, அந்த மானு அந்த காடெல்லாம் சுத்திச்சு. பய மெல்லாம் போயி சாந்தமா போயிடிச்சு.

கதையை முடித்தாள் அத்தை. கூடத் தின் மற்ற பகுதிகள் இருண்டிருந்தன. இந்த பகுதியில் மட்டும்தான் வெளிச்சம். இருண்ட பகுதியை காடாய் கற்பனை செய்து, கதைக் கேட்ட குழந்தைகள் அந்தமானுடன் தோழமை பூண்டு முடிவில் சாந்தப்பட்டு போயி னர். தலையணைகளை அணைத்து உறங்கிப் போயினர். நீளமும் மஞ்சளும் கறுப்பும் கலந்த முரட்டுத்துணி தலையணையில் சாய்ந்து, ஒற்றை க்கண்ணைத் திறந்து, உறக்கக் கலக்கத்தில் பார்த்த போது, எங்கள் நடுவே, இரு கைகளையும் மார் பின் மேல் குறுக்காகப் போட்டு தன் தோள்களை அணைத்தவாறு, முட்டிமேல் சாய்ந்து கொண்டு தங்கமத்தை உட்கார்ந்து கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாக்கள் பல!

நம்முடைய பூமிக்கு ஒரே ஒரு நிலா உள்ளது. இதைப் போல ஏனைய சில கிரகங்களுக்கு நிறைய நிலாக்கள் உள்ளன. சனிக் கிரகத்திற்கு மட்டும் 61 நிலாக்கள் உள்ளன. இதைத் தவிர சுமார் 200 நிலவுக் குட்டிகள் உள்ளன.

இந்த 61 நிலாவில் மிகப்பெரிய நிலவான டைட்டனை ஆராய்வதில் தற்போது விஞ் ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த டைட்டன் நமது பூமியின் தன்மையை ஒத்திருக்கிறதாம். பூமி என்றால், பூமி சுமார் 450 கோடி ஆண்டு களுக்கு முன்பு எந்தத் தன்மையில் இருந் ததோ அந்தத் தன்மையில் தான் தற்போது டைட்டன் உள்ளது.

டைட்டன் என்பது புதன் கோளை விடவும் பெரியது. சூரிய மண்டலத்திலேயே மிகப் பெரிய நிலவான வியாழனின் நிலவான 'கானிமீட்' இற்கு அடுத்ததாக இந்த டைட் டன் உள்ளது. பூமியை சுமார் 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பார்த்திருந்தால் எவ் வாறு இருந்திருக்குமோ அப்படியே உள்ளது இந்த நிலாவும் என்று விஞ்ஞானிகள் கூறுகின் றனர். எனவே இந்த டைட்டனை தொடர்ந்து ஆய்வு செய்து வந்தால், உயிரினங்கள் எவ் வாறு தோன்றியிருக்கும் என்று கண்டறிய முடியும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

எனவே, டைட்டனை ஆராயும் விதமாக 'காசினி' என்கிற ஆய்வுக்கலத்தின் மூலம் 'ஹைஜென்ஸ்' கலத்தை விஞ்ஞானிகள் அனுப்பினர். 'ஹைஜென்ஸ்' செய்த ஆய்வின் படி, டைட்டனில், பனிப்பாறைகள், கடற் கரை, கால்வாய்கள் போன்று நீர்நிலைகள் காணப்படுகின்றன என்று உறுதி செய்யப் பட்டுள்ளது.





சூரியக் குடும்பத்தில் பூமியைப் போன்று மேகங்கள் மற்றும் இரசாயன நிலைகளைக் கொண்ட, இதுவரை அறியப்பட்ட இட மாக டைட்டன் கருதப்படுகிறது.

ஆனால், டைட்டனின் காற்று மண்டலம் மிகவும் அடர்த்தியாக இருப்பதையும் 'ஹைஜென்ஸ்' தெரிவித்துள்ளது. மேலும், 'ஹைஜென்ஸ்' செய்த ஆய்வின்படி, டைட் டனில் இருக்கும் காற்று மஞ்சல் நிறத்தில் இருக்கக் கூடும் என்றும் விஞ்ஞானிகள் கூறு கின்றனர். காற்றுக்கு நிறமில்லாத தால்தான் பல்வேறு ஆய்வுகளை துல்லியமாக நாம் மேற்கொள்கிறோம். டைட்டனில் இருக்கும் அடர்த்தியான காற்றினால், 'ஹைஜென்ஸ்' எடுத்த புகைப்படங்களில், தரைப்பகுதியில் என்ன இருக்கிறது என்பதை துல்லியமாக அறிய முடியவில்லை என்று தெரிவித்துள்ள னர் விஞ்ஞானிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடை தேடிப் போகிறது.



வேதனையாம் சேறமிழ்ந்து விதியை நொந்த வேளையிலும்.
சோதனைகள் சூழ்ந்தலைந்து சுகம் கலைந்த போதினிலும்
ஆதரவோ தொலைந்த கன்று அமைதிகெட்ட நாட்களிலும்
நீதகற்றி வாழ்வளிக்கத் தேடி வரார் கூடி வந்து
ஏதிவர்கள் நிழற்படமிங் கெடுக்கின்றார். சிறுமியிவள்
கூதலிடப் புன்னகைத்தாள் குறும்பார்வைத் தேடலதும்

பெருமழையில் நனைந்தாளோ பெய்துயரில் தோய்ந்தாளோ.
இருவிழியும் எண்ணத்தின் எழிற்படமாய் வடிந்திருக்க
ஒரு கனவு விரிகிறது உண்மையிவர் நாடிவந்து
தருமுதவி மனமுவப்போ தற்புகழ்ச்சிப் பெருங்குவையோ
அருமந்த நாட்களெல்லாம் அழுதநிலைக் கார்துணையோர்.
பொருமுமுளம் விடைதேடிப் போகிறது! போகிறது!

நெடுந்தீவு மகேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாகரத்திலும் சீனா? முன்னணியில்







உலகத்திலே அதிகளவு தற்கொலைகள் நடைபெறுகின்ற நாடு சீனா என்பது குறித்து கட்டுரையொன்றை கடந்த இதழொன்றில் பிரசுரித்திருந்தோம். இப்போது உலகத்திலேயே அதிகளவு விவாகரத்து நடக்கின்ற நாடாகவும் சீனாவையே கணிப் பிடக்கூடியதாக இருக் கின்றது.

அதிகளவு மக்கள் தொகை கொண்ட நாடு என்கிற பட்டியலில் முதலிடம் வகிப்பது சீனாதான். இது அனைவருக்கும் தெரிந்து விடயம். தற்போது சீனா அதற்கு அப்படியே மாறுதலான ஒரு விடயத்திலும் முதலிடம் பிடிக்கலாம் என்று தோன்றுகிறது. அதுதான் விவாகரத்து.

சீனாவில் தற்போது விவாகரத்து செய்து கொள்ளும் தம்பதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஒவ்வொரு நாளும் சராசரியாக 4,500 விவாகரத்து வழக்குகள் பதிவு செய்யப்படும் அளவிற்கு நிலமை உள்ளது.மேலை நாடுகளில் உருவான இந்த விவாகரத்து தற்போது காற்றுப் போல பல நாடுகளுக்கும் பரவி விட்டது. ஆனால், மேலை நாடுகளில் தற்போது பெரும்பாலானோர் ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழும் முறையைப் பின்பற்றத் துவங்கியுள்ளனர். ஆனால், இந்தியா, சீனா போன்ற வளரும் நாட்டவர்கள் வளர்ந்த நாட்டு மக்களைப் போல வாழும் பழக்கத்தை நடைமுறைக்கு கொண்டு வந்து கொண்டிருக்கின்றனர். அதில் அவர்கள் தற்போது அதிகமாக பின்பற்றி வரும் முறைதான் விவாகரத்து.

சீனாவில் இந்த ஆண்டு முதல் 6 மாதங்களில் மட்டும் 8,48,000 தம்பதிகள் விவாகரத்து கோரி நீதிமன்றங்களில் மனுத் தாக்கல் செய்து இருக்கிறார்கள். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 10 விழுக்காடு அதிகமாகும்.

விவாகரத்து அதிகமாக இருக்கும் பகுதிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஷின்ஜியாங் உய்க்குர் மாநிலம் தான் முதலிடத்தில் உள்ளது. பீஜிங் நகரம் விவாகரத்து அதிகம் உள்ள நகரங்களில் 8வது இடத்தில் உள்ளது. ஷாங்காய் நகரம் 6வது இடத்தில் உள்ளது.


இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்ன வென்றால், மக்கள் தொகை வெகுவாக உயர்ந்து கொண்டிருந்த போது விவாகரத்துகள் மிகவும் குறைவாக இருந்தன. எப்போது மக்கள் தொகைக் குறைப்பு நடவடிக்கை துவங்கப்பட்டதோ அப்போதில் இருந்தே விவாகரத்துகள் அதிகரிக்க ஆரம்பித்து விட்டன. மேலும், மக்கள் தொகைக் குறைப்பு நடவடிக்கை கடுமையாகப் பின்பற்றப்படும் பகுதிகளில்தான் விவாகரத்துகள் அதிகமாக பதிவாகின்றன என்கிற புதிய ஆய்வும் தெரிய வந்துள்ளது.

2009ஆம் ஆண்டு மட்டும் 24,70,000 தம்பதிகள் விவாகரத்து பெற்றுள்ளனர். 2005ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை ஆண்டு தோறும் 7.6 விழுக்காடு தம்பதிகள் என்ற விகிதத்தில் விவாகரத்து செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதனால் சீன அரசு தனது நாட்டு கலாச்சார சீரழிவு குறித்து கவலைக் கொண்டுள்ளது. மக்கள் தொகையைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் சீன அரசு, எப்படி விவாகரத்துக்களை குறைக்க நடவடிக்கை எடுப்பது என்று தெரியாமல் குழம்பிய நிலை யிலுள்ளது.

ஒரு ஆண்டில் இத்தனை தம்பதிகள் விவாகரத்துக் கோருவதற்கான காரணங்களை சீன அரசு ஆய்வு





செய்து வருகிறது. அதன்படி, கணவன் ஒரு இடத்திலும் மனைவி ஒரு இடத்திலும் வேலை செய்வது தான் முக்கியப் பிரச்சினையாக உள்ளது என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்கின்றனர். பணி மாறுதல்கள், பதவி உயர்வு போன்றவற்றால் இருவரும் தனித்தனியாக வேலை பார்ப்பதால் குடும்ப உறவுகளில் நிலைத் தன்மை அற்று விடுகிறது. வேலை பார்க்கும் இடங்களில் சக பணியாளர்களுடன் ஏற்படும் ஈடுபாடு திருமண உறவை முறிக்கும் அளவிற்கு சென்று விடுகிறது. இதுபோன்று பல்வேறு காரணங்களால், சீனாவில் திருமண உறவுகள் சீரழிந்து, விவாகரத்து வரை செல்கிறது.

இப்படியே போனால் குடும்ப முறை அழிந்து விடும் சூழ்நிலை ஏற்படலாம். இதனால் மக்கள் தொகைப் பெருக்கமும் நிச்சயம் அதிகரிக்கும் என்று அச்சம் கொள்கிறது சீனா. மக்கள் தொகைக் குறைப்பை கடுமையாக்குவதா, விவாகரத்தைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதா என்று தெரியாமல் திணறுகிறது சீன அரசு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடலாசிரியர் சினேகன் நடிக்கும்



## உயர்திரு 420

பாடலாசிரியர் சினேகன் கதாநாயகனாகியிருக்கும் முதல் படம் 'உயர்திரு 420' இப்படத்தை பிரேம்நாத் இயக்கியுள்ளார். 'றிச் இந்தியா' சந்திர சேகர் தயாரித்திருக்கிறார்.

படம் தொடங்கியதிலிருந்தே 420 வேலைகளை செய்து வருகிறார் சினேகன். அப்படிப்பட்டவர் பெரிய அளவில் கொள்ளையடிக்கும் திட்டத்துடன், வசீகரன் நடத்தி வரும் 'ஸ்டார்' ஹோட்டலுக்கு வேலைக்குச் செல்கிறார். ஆனால், சினேகனின் மீது மிகுந்த நம்பிக்கை வைக்கிறார் வசீகரன். இதனால், தான் சென்ற வேலையை மறந்து வசீகரனுடன் நட்பாகிறார் சினேகன். ஏலத்துக்குப்போக இருக்கும் வசீகரனின் ஹோட்டலை தனது புத்திசாலித்தனத்தால் மீட்கிறார். இதற்காக தான் செய்யும் சூழ்ச்சியில் வசீகரனையே தூக்கில் தொங்க விடுகிறார் சினேகன். முடிவில் என்ன நடக்கிறது என்பதே மீதிக்கதை.

பாடலாசிரியர் சினேகனுக்கு முதல் படம் என்ற போதும் அனுபவமுள்ள நடிகரைப்போல் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை கலக்குகிறார். பாடல் காட்சிகள் சண்டைக் காட்சிகளில் இளமைதுள்ளல் தெரிகிறது. திருட்டுத் தொழிலையே பிரதானமாக செய்து வரும் சினேகன், நட்புக்காக தன்னையே மாற்றிக் கொள்ளும் காட்சிகளில் ரசிகர்களின் மனதை தொடுகிறார். அதேபோல் வசீகரன், ஹோட்டல் முதலாளியாக வந்து மிடுக்கான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். கதாநாயகி மேக்னாராஜ். சினேகனிடம் மனதை பறிகொடுக்கும் மேக்னாராஜ், தன்னையும் அவர் ஏமாற்றித்தான் காதலித்திருக்கிறார் என்பது தெரிந்ததும் அவரை துரத்தியடிக்கும் காட்சி சிரிப்பு வெடி.

வில்லனாக, பாசமான அப்பாவாக, ஜெயப்பிரகாஷ் நடித்திருக்கிறார். கதாபாத்திரத்திற்கு தகுந்த நடிப்பை வெளிப்படுத்தி தன்னால் அதிரடி வில்லனாகவும் உருவெடுக்க முடியும் என்பதை நிரூபித்திருக்கிறார். பாரதிராஜாவிடம் உதவியாளராக பணியாற்றிய பிரேம்நாத் இயக்கிய படம். இது பாரதிராஜா பாணியில் தான் இருக்கும் என்று நினைத்தால், முற்றிலும் மாறுபட்டு அமைந்துள்ளது. வித்தியாசமான ஒரு படத்தைத் தந்திருக்கிறார் பிரேம்நாத். புதுமுக நாயகன் சினேகனை வைத்து கதையை போரடிக்காமல் கலக்லப்பாக இயக்கி வெற்றி பெற்றிருக்கிறார் பிரேம்நாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org